வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 20.08.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 259 | பக்கங்கள் : 16




# பேரிடர் மேலாண்மை சட்டத்தை அரசு உடன் அமுலாக்க வேண்டும்

## பிரதமர் மஹிந்த அமைதியை களைய வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார் மனோ கணேசன்



கொழும்பு, ஓக. 20

“பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைதியை களைய வேண்டும். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பேரிடர் மேலாண்மை சட்டத்தை அமுலாக்க வேண்டும். ஆளும் கட்சியும், எதிர்க் கட்சிகளும் இணைந்த இந்த “தேசிய பேரிடர் மேலாண்மை குழு”வின் மூலம், மக்கள் செத்து மடியும் கொரோனா பேரிடரை சந்திப் 15

# சுகாதார அமைப்பு முடங்கினால் கடமையில் ஈடுபடவேமாட்டோம்!

## சுகாதார ஊழியர்கள் அரசுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஓகஸ்ட் 20

தற்போதைய கொரோனா தொற்றுநோயை நிர்வகிக்க கடுமையான முடிவுகள் எடுக்கப்படாவிட்டால், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க சுகாதார பணியாளர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தலைமை பயிற்சி தாதிய அதிகாரி புஷ்பா ரம்யானி சொய்சா, சுகாதார அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். 15

# வவுனியாவில் கொரோனாவால் பெண் மரணம்!

வவுனியா, ஓக. 20

வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் கொவிட் தொற்று நோயால் நேற்று மரணமானார்.

குறித்த பெண்ணுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் பம்பைமடுவில் அமைந்துள்ள கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

# தொற்றினால் மேலும் 186 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 20

நாட்டில் நேற்று முன் தினம் புதன்கிழமை 186 பேர் கொரோனா நோயினால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

நாட்டில் ஒரே நாளில் அறிவிக்கப்பட்ட கொரோனா நோயினால் உயிரிழந்தோரின் அதிக எண்ணிக்கை இது 15

# 3,806 பேருக்கு நேற்று தொற்று!

## ஒரே நாளில் அதிகளவானோர் அடையாளம்

கொழும்பு, ஓக. 20

இலங்கையில் முதன்முறையாக ஒரே நாளில் 3 ஆயிரத்து 806 கொரோனா தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக 8ஆவது நாளாக 3 ஆயிரத்து மேற்பட்ட தொற்றாளர்கள் தினசரி அடையாளம் காணப்படுகின்றனர்.

இதன்மூலம் நாட்டில் தற்போது 47 ஆயிரத்து 847 தொற்றாளர்கள் வைத்தியசாலைகள், இடைத்தங்கல் மையங்கள் மற்றும் வீடுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாட்டில் அதிகளவு தொற்றாளர் மருத்து 15

# சமூக தொற்றாகிவிட்டது கொரோனா குறைவதற்கான அறிகுறியே இல்லை

## மருத்துவ நிபுணர் ரவி ரன்னன் எலிய கூறுகிறார்

கொழும்பு, ஓக. 20

இலங்கையில் கொரோனா வைரஸ் பெரும் சமூகத் தொற்றாக மாற்றமடைந்துள்ளது. அத்துடன், தொற்று நோய் குறைவதற்கான அறிகுறிகளையே காண முடியவில்லை என சுகாதார கொள்கைகள் ஸ்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய நிபுணர் ரவி ரன்னன் எலிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் கடந்த 2 நாள்களாக 170க்கு மேற்பட்ட மரணங்கள் உத்தியோகபூர்வ 15

# இன்று முதல் இரு வாரங்கள் அரசின் விசேட நிவாரணம்

கொழும்பு, ஓக. 20

நிவாரணப் பொதியொன்றை இன்று முதல் இரண்டு வார காலத்துக்கு மக்களுக்கு விநியோகிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

2600 ரூபா பெறுமதியான 20 பொருள்கள் அந்த நிவாரணப் பொதியில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

1998 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற் 15

# காலதாமதம் வேண்டாம்!

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்



கொழும்பு, ஓக. 20

“புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் நீண்ட காலம் கடத்தப்பட்டுள்ள நிலையில் இனியும் கால தாமதங்களை ஏற்படுத்த வேண்டாம். விரைவில் புதிய அரசமைப்பு உருவாக்க விடயங்களை முன்னெடுக்க வேண்டும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

மனோதத்துவ டாக்டரிடம் வந்த ஒருவர், டாக்டர் நீங்கள்தான் என்னை எப்படியாவது குணப்படுத்த வேண்டும் என்றார்.

உங்களுக்கு என்ன நோய்? விளக்கமாகச் சொல்லுங்கள்? என்று கேட்டார் டாக்டர்.

'இரவில் நான் கட்டிலின்மேல் படுத்தவுடன் கட்டிலின் கீழ் யாரோ இருப்பதைப் போலத் தோன்றுகிறது. கட்டிலை விட்டுக் கீழே இறங்கிப் பார்க்கிறேன். அங்கு யாருமே இல்லை. பயம் போவதற்காக நான் கட்டிலின் கீழேயே படுத்துக் கொள்கிறேன். அப்பொழுது கட்டிலின் மேல் யாரோ படுத்துக்கொண்டிருப்பதைப் போலத் தோன்றுகிறது. இப்படியே இரவு முழுவதும் கட்டிலின் மேலும் கீழும் மாறிப்மாறிப் படுத்துக்கொண்டே இருக்கிறேன். இதனால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல இருக்கிறது' என்றான்.

டாக்டர் சொன்னார்,

'உங்களைக் குணப்படுத்த முடியும் என்று நினைக்கிறேன். வாரந்தோறும் இரண்டுமுறை தவறாமல் என்னை இரண்டாண்டுகள் பார்க்கவேண்டும். என்னை ஒவ்வொரு முறை சந்திப்பதற்கும் 1000 ரூபா கட்டணம் தரவேண்டும். என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டார் டாக்டர்.

'நிறைய செலவாகும்போல இருக்கிறதே? எதற்கும் என் மனைவியைக் கேட்டு அடுத்த வாரம் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் அவர்.

ஒரு வாரம் கழித்து டாக்டருக்குப் போன் வந்தது. அதில் அவர், 'டாக்டர் என் மனைவி என் நோயைக் குணப்படுத்தி விட்டாள்' என்றார்.

டாக்டரால் இதை நம்ப முடியவில்லை, எப்படி? என்று கேட்டார்.

'நான் படுக்கும் கட்டிலின் கால்களை என் மனைவி வெட்டி விட்டாள்' என்றார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்து, அம்பாந்தோட்டைக்கு இரவோடு இரவாக போய்ச்சேர்ந்த பின்னர், அவரது அரசியல் பயணம் அத்தோடு முடிந்தது என்றே எல்லோரும் நம்பினர். அவர் தோல்வியைத் தாங்கமுடியாத மக்கள் அவரது வீடுதேடி அலை அலையாக திரண்டு சென்று அவருக்கு ஆறுதல் கூறினர். மக்கள் அவர்மீது வைத்திருந்த நம்பிக்கை அப்போது தெரியவந்தது.

அவர் மீண்டும் கொழும்பு திரும்பியதும், அவரது அரசியல் அலுவலகம்போல இயங்கியது நுகேகொட அபயராம விகாரை.

அப்போது ஆட்சியிலிருந்த ரணில் தரப்பினர், மஹிந்தர் ஒரு விகாரையை தனது அரசியல் அலுவலகம்போல நடாத்துவதற்கு எதிராக தொடர்ந்து குரல்கொடுத்தபோதிலும் மஹிந்தர் மாத்திரமல்ல, அந்த விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரரும் கண்டுகொள்ளவே இல்லை.

மஹிந்தரின் மீள் எழுச்சியில் அந்தத் தேரரின் பங்களிப்பு அளப்பரியது.

ஆனால், அண்மைக்காலமாக அவர் இந்த அரசின்மீதும் குறிப்பாக, ஜனாதிபதிமீதும் கடும் கண்டனங்களைத் தொடர்ந்து தெரிவித்துவருகிறார்.

அரசாங்கம் இரவுநேர ஊரடங்கை அமுல்படுத்திய போது அவர், ஆந்தைகளுக்கும் வௌவால்களுக்குமா ஊரடங்கு? என்று காட்டமாக தெரிவித்திருந்தார்.

கொரோனா வைரசின் டெல்ரா திரிபு பரவல் நாட்டை உலுக்கி எடுப்பதற்கு முன்னர், எதிர்க்கட்சியும் மற்றும் சில அரசியல் தரப்பினரும், நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்திற்கு செல்கின்றது. இன்னும் இரண்டு வாரங்களுக்குத்தான் நாட்டின் டொலர் கையிருப்பில் இருக்கின்றது என்று கூக்குரல் இட்டனர்.

இப்போது, பொருளாதார நெருக்கடியை விட கொரோனாவைக் கட்டுப்படுத்துவதுதான் முக்கியம் என்கின்றனர். உண்மைதான், சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம்.

ஆனால் அதற்கு முதலில், வீதியில் ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடி போராட்டம் நடாத்துவது குறித்தும் இந்த அரசியல்வாதிகளும் தொழில்சங்க தலைவர்களும் சிந்திக்க வேண்டாமா என்று ஆளும் தரப்பு கேட்பதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது.

கட்டிலின் கால்களை வெட்டி கணவனின் மனப் பீதியை மனைவி போக்கியதுபோல, வைரஸ் நெருக்கடியைத் தடுக்கமுடியும் என்றால், உலகம் இப்படியொரு நெருக்கடியை சந்திக்கவேண்டி வந்திருக்காது.

அரசாங்கம் நாட்டை முடிக்கினால்தான் மக்கள் நடமாட்டத்தை தடுக்கலாம் என்பதல்ல. மக்கள் தாங்களாகவே முடங்கிவிட்டாலும் நிலைமையைக் கட்டுப்படுத்தலாம்.!

**- ஊர்க்குருவி**

# கொழும்பு நகர வர்த்தக நிலையங்களை மூடுக!

## கொழும்பு மேயர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 20

நாட்டில் சடுதியாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் முகமாக கொழும்பு நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் ஊடக அறிக்கையொன்றையும் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் ரோஸி சேனாநாயக்க கூறியுள்ளதாவது: கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் முகமாக கொழும்பு நகரத்திலுள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்களையும் சில நாள்களுக்கு மூட வேண்டும்.

இதனூடாக கொழும்பு நகரத்தில், கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் வர்த்தக சங்கங்கள் ஒன்றிணைந்து, வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கதோர் விடயமாகும்.

இதேவேளை, 2022 ஜனவரிக்குள் 30,000 பேர் வரை கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்பர் என்ற உலக சுகாதார அமைப்பின் எச்சரிக்கையை கவனத்தில் கொள்ள வேண்டும்" என அவர் குறிப்பிட்டார்.

# தொற்றில் இருந்து மேலும் 2,188 பேர் குணமடைவு



கொழும்பு, ஓக. 20

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 188 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வியாழக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 16 ஆயிரத்து 528 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 65 ஆயிரத்து 683 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 434 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுதவிர, அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றிய ஏராளமான அமெரிக்க இளைஞர், யுவதிகளும் அமெரிக்காவின் வல்லாதிக்க கெடுபிடிக்காக ஆப்கானிஸ் தானில் தமது இன்னுயிரை நீத்துள்ளனர். இதுதவிர ஏராளமானோர் அங்கவீனர்களுமாகியுள்ளனர்.

இத்தகைய பின்னணியில், அமெரிக்கா ஜனநாயகத்தை பாதுகாக்கும் உலகப் பொலிஸ்காரனென்ற தகுதிக்கு எவ்வகையிலும் இனிவரும் காலங்களில் ஒரு பொருத்த மற்ற நாடாக இருக்குமென்றே குறிப்பிடமுடியும்.

## கல்வி TV CHANNEL-1

**20.07.2021 வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி TV CHANNEL - 2

**20.07.2021 வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
20.08.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சம்பந்தனை இயக்கும் நம்பிக்கை?

அரசியல் யாப்பு விவகாரத்தை தாமதிக்காமல் முன்னெடுக்குமாறு சம்பந்தன் ஜனாதிபதி கோட்டாபயவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார். முன்னைய விடயங்களை சுட்டிக் காட்டியிருக்கும் சம்பந்தன், எப்போதும் ஜனாதிபதியை சந்திப்பதற்கு தாம் தயராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். அதேவேளை, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்ந்தும் முழுமையாக அமுல்படுத்தாமல் இருப்பதையும் குறித்த கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

உடல் ரீதியில் மிகவும் தளர்ந்திருக்கும் சம்பந்தன், அரசியல் தீர்வின் மீதான தனது ஈடுபாட்டையும் அக்கறையையும் அவ்வப்போது வலியுறுத்திவருகின்றார். ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டுவர முடியுமென்னும் நம்பிக்கையுடன் முன்னைய ஆட்சியாளர்களுடன் இணைந்து செயற்பட்ட சம்பந்தன், தனது முயற்சியில் தோல்வியடைந்தார். ஆனால், அரசியல் யாப்பு தொடர்பில் ஓர் இறுதி வரைபு தயாரிக்கப்பட்டது. அந்த வரைபின் அடிப்படையில் அடுத்த கட்ட முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு முன்னர் ரணில் - மைத்திரி அரசாங்கம் உள் முரண்பாடுகளால் வீழ்ச்சியடைந்தது. ரணில் - மைத்திரி உள் மோதலின்போது, சம்பந்தன் முற்றிலுமாக ரணில் பக்கம் சாய்ந்தார். இதனால், மைத்திரிக்கும் கூட்டமைப்பிற்கும் இடையிலான உறவு முறிவடைந்துவிட்டது. மைத்திரி - ரணில் முரண்பாட்டின்போது, சம்பந்தன் பக்கம் சாராத முடிவை எடுத்திருக்கவேண்டும். ஆனால், சம்பந்தன் அவ்வாறு செய்யவில்லை. ஆனால், இறுதியில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, மோசமாக வீழ்ச்சியை சந்தித்தது. கூட்டமைப்பு ரணிலை பாதுகாக்க முற்பட்டதன் பயன் என்ன?

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கமும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசி வருகின்றது. புதிய அரசியல் யாப்பு தொடர்பிலான நிபுணர் குழு, கூட்டமைப்புடனும் கலந்துரையாடியிருக்கின்றது. அதேபோன்று, ஏனைய கட்சிகளுடனும் அவர்கள் கலந்துரையாடியிருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான், தற்போது சம்பந்தன் அடிக்கடி அரசியல் யாப்பு தொடர்பிலும் அரசியல் தீர்வு தொடர்பிலும் பேசிவருகின்றார். ஆனால், இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தை வெளிப்படையாகவே எதிர்த்து வருகின்றது. அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட நீக்கும் நிலைப்பாட்டை இதயத்தில் வைத்திருக்கின்றது.

இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திடம் சம்பந்தன் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு நியாயமான அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றார்? ஒருவேளை, ராஜபக்ஷக்கள் நினைத்தால் ஓர் அரசியல் தீர்வை கொண்டுவர முடியுமென்று எண்ணுகின்றாரா?

அண்மையில் கூட்டமைப்பின் சார்பில் சர்வதேச விவகாரங்களை கையாண்டுவரும் எம். ஏ. சுமந்திரனும், தற்போது வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸும் அமெரிக்க தூதுவரின் இல்லத்தில் சந்தித்து பேசியிருந்தனர். சம்பந்தனது அனுமதியுடன்தான் தான் இந்த சந்திப்பில் ஈடுபட்டதாக சுமந்திரன் பின்னர் தெரிவித்திருந்தார். அதேவேளை, சுமந்திரன் பறிதொரு கருத்தையும் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, இலங்கையின் மீதான அழுத்தங்களை தொடர்ந்துகொண்டிருப்பது எங்களின் நோக்கமல்ல. மாறாக, அந்த அழுத்தங்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பதுதான் முக்கியமானது. ஒருபுறம் இந்த கருத்து சரியாக இருந்தாலும்கூட, மறுபுறம் கடந்த கால அனுபவங்களை புறம்தள்ளி சம்பந்தன் செயற்பட்டால், மீண்டும் கூட்டமைப்பிற்கு ஏமாற்றங்களே மிஞ்சும். இந்திய மற்றும் அமெரிக்க ஆதரவுடன் ஓர் அரசியல் தீர்வை காணமுடியுமென்று சம்பந்தன் நம்பக்கூடும் ஆனால், ஆட முடியாத ஆட்டமொன்றிற்குள் சென்று, மீண்டும் ஏமாற்றங்களை சந்திப்பதை புத்திசாலித்தனம் என்று கூறமுடியாது.

# அமெரிக்காவை ‘உலக பொலிஸ்காரனாக’ இனிமேலும் கருதமுடியாது!

**-அலசுவது இராஜதந்திரி-**

உலகின் மாபெரும் ஜனநாயக - இராணுவ வல்லரசு என்றே, அமெரிக்கா உலக அரங்கில் தன்னை வெளிப்படுத்தி வருகின்றது. ஆனால், ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த சில தினங்களுக்கு முன் வெளியேறிய அமெரிக்கா, அப்பாவி ஆப்கானிஸ்தானிய மக்களை தலிபான்களின் கோரப்பிடிக்குள் சிக்க வைத்துச்சென்றுள்ளது.

22 வருடங்களுக்கு முன்னர் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையென்று தனது இராணுவ பலத்தோடு ஆப்கானிஸ்தானில் தரையிறங்கிய அமெரிக்கா, இன்று அரசியல் ரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ எதனையும் சரிவர சாதிக்காது ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியுள்ளது. இதன்மூலம், அரசியல் ரீதியாக ஆப்கானிஸ்தானிலிருந்த சவால்களை கையாளமுடியாத அதேசமயம், இராணுவ ரீதியாகவும் எதனையும் சாதிக்கமுடியாமல் அமெரிக்கா வெளியேறியிருப்பது, ‘உலகின் பொலிஸ்காரனென்ற’ அதன் முகத்திரையை கிழித்தெறிய வைப்பதாகவே இருக்கின்றது.

ஆப்கானிஸ்தானைப்போன்றே வியட்நாம் மற்றும் ஈரான், கியூபா, எதியோப்பியா போன்ற நாடுகளில்கூட கடந்த காலங்களில் எதனையும் உருப்படியாக சாதிக்க முடியாது அமெரிக்கா வெளியேறியது வரலாறாக இருக்கின்றது.

**மனதை வருடும் காட்சி**

பெருமளவிலான அமெரிக்க வீரர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய நிலையில், தலைநகர் காபூல் விமானநிலையத்தில் தங்கியுள்ள சிறுதொகையினரான அமெரிக்க வீரர்களை ஆப்கானிஸ்தான் பெண்களும், சிறுவர், சிறுமிகளும் தம்மைக் காப்பாற்றுமாறு கதறியழுகின்ற காட்சி மனதை உருக வைப்பதாக இருக்கின்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் அமெரிக்க படைகளை ஆப்கானிஸ்தானிலிருந்து வாபஸ் பெறச்செய்யும் அதிரடிமுடிவு, அப்பாவி ஆப்கானிஸ்தான் மக்களை எவ்வகையிலும் கவனத்தில் கொள்ளாததாகவே இருக்கின்றது. தற்போது ஆப்கானிஸ்தானை தமது பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ள தலிபான்கள் கடந்த சில தினங்களில் பல அப்பாவிப் பெண்கள், இளைஞர்களை சுட்டுக்கொன்றுள்ளனர். அத்துடன், காபூலிலுள்ள சிறைச்சாலைகள் உடைக்கப்பட்டு அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்தோர் தப்பிச்சென்றுள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது.

**பத்திரிகையாளர் பலி**

பத்திரிகையாளர் ஒருவரும் அங்கே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வீதிகளில் உரையாடிக்கொண்டு செல்லும் இளம் பெண்கள், இளைஞர்களுக்கும் கசையடி, பிரம்படி என்பவற்றையும் தலிபான்கள் ஈவிரக்கமின்றி வழங்கி வருகின்றனர். அத்துடன், சிறு களவுகள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களையும் மனிதாபிமானமற்ற முறைகளில் வீதிகளில் நிற்கவைத்து, தலிபான்கள் மிகவும் கேவலப்படுத்தி வருகின்றனர்.

எனவே அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில் ஜனநாயக அரசியலை நிலைநிறுத்துவதில் தோல்வி கண்டிருப்பதோடு, இராணுவ ரீதியாகவும் தோல்வியைத் தழுவி, பெரும் மனித அவலங்களுக்கும் இடமளித்துள்ளது.



நேற்றுக்காலை காபூலில் இடம்பெற்ற ஒரு மிக துயரகரமான சம்பவத்தை இங்கே குறிப்பிடவேண்டியுள்ளது.

ஆப்கானிஸ்தான் விமானப்படையைச் சேர்ந்த நான்கு பெண் விமானிகளில் ஒருவரான ஸாபியா பிரோஸி என்ற இளம் பெண் பலர் முன்னிலையில் கல்லெறிந்து கொல்லப்பட்டுள்ளார்.


ஆப்கானிஸ்தானுடன் இதவரை காலமும் இந்தியா கொண்டிருந்த வர்த்தக தொடர்புகளுக்கும் தலிபான்கள் தடைவிதித்துள்ளனர். ஆப்கானிஸ்தானை மேற்கத்தைய தொடர்புகளிலிருந்து தனிமைப்படுத்தும் நடவடிக்கையாகவே தலிபான்கள் தற்போது தமது செயல் திட்டங்களை துப்பாக்கி முனையில் துரிதப்படுத்தி வருகின்றனர். ஆப்கானிஸ்தான் எந்தவொரு விதத்திலும் சர்வதேச சமூகத்தில் நீண்டநெடுங்காலம், தலிபான்களது அடிப்படைவாத இஸ்லாமிய ஆட்சியின் கீழ் நிலைத்து நிற்கமுடியாது. ரஷ்யா, சீனா போன்றநாடுகள் ஆப்கானிஸ்தானுக்கு துணை நிற்க முற்படலாம். ஆனால், நீண்டகால அடிப்படையில் தலிபான்கள் மனிதாபிமான மீறல்களில் ஈடுபட்டுச்செல்லும்போது, சர்வதேசத்துக்கு முன்பாக ரஷ்யா, சீனா போன்றவைகூட மனிதாபிமானப் பிரச்னைகள் குறித்து பொறுப்புக்கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படமுடியும்.

**அமெரிக்க இராணுவ சாதனங்களின் பரிசோதனை**

அமெரிக்காவைப் பொறுத்தவரை அதனுடைய 22 வருடகால பிரசன்னம் ஆப்கானிஸ்தான் மக்களை பகடைக்காய்களாக வைத்து தனது இராணுவ வல்லாதிக்கத்தை பரிசோதித்து பார்த்ததாகவே அமைந்திருந்தது. கடந்த 22 வருடகாலத்தில் அமெரிக்கா தயாரித்த அதி நவீன போர் விமானங்கள் மற்றும் இராணுவ சாதனங்களை மிகவிரிவான முறையில் தலிபான்களுக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் பரீட்சிக்கப்பட்டதே உண்மையாகும்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 20 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - ஆவணி 04
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திரையோதசி




20.08.2021

**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கும். உற்சாகமாக செயல்படுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டு. கேட்ட உதவி கிடைக்கும். புதுத் தொடர்பு பெறுவீர்கள்.

**இடபம்**
மனசாட்சிப்படி செயல்பட்டு நிம்மதி காண்பீர்கள். பேச்சினால் பிரச்னை வராமல் கவனமாக இருங்கள். மற்றவர்களுடைய வம்பில் சிக்கி சிரமப்பட வேண்டாம்.

**மிதுனம்**
கெட்ட பெயர் ஏற்படுத்தித் தரும் செயல்களை விலக்குங்கள். எதிர்பார்ப்புகள் தாமதமானாலும் நல்லபடியாக முடியும். தனிப்பட்ட விஷயங்களை வெளி நபர்களிடம் பகிர வேண்டாம்.

**கடகம்**
எதிர்மறை விமர்சனங்களை கண்டு பயப்பட வேண்டாம். பணியில் முன்பு ஏற்பட்டிருந்த நெருக்கடிகள் மெல்ல நீங்கும். முன்கோபத்தை தவிர்க்கவும். உணவுப்பழக்கத்தில் கவனம் தேவை.

**சிம்மம்**
குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றித் தருவீர்கள். குடும்பத்தினர் விரும்பிய பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். திருமண முயற்சிகள் பலிதமாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி**
மனைவி வழி உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள். நன்மை கூடும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்கள் பேச்சு எடுபடும்.

**துலாம்**
உங்களின் செல்வாக்கு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வெற்றிகரமான நாள். வியாபாரத்தில் ஏற்ற இறக்கம் உண்டு. அமைதியான நாள். சாதகமான செய்தி ஒன்று வரும்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் மாற்றமின்றி எப்போதும்போல் இருக்கும். உங்களின் திட்டம் ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமை ஏற்படும்.

**தனுசு**
உங்களிடம் உள்ள தனித்திறமைகளை கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உங்களின் முயற்சி வெற்றி பெற கூடுதலாக உழைப்பீர்கள்.

**மகரம்**
பிரியமான ஒருவரை சந்திப்பீர்கள். சிறு கவலை ஏற்படும். சாலையைக் கடக்கும்போதும், வாகனம் ஓட்டும்போதும் கவனம் தேவை. வீடு, வாகனம் மூலம் பராமரிப்புச் செலவு ஏற்படும்.

**கும்பம்**
கடனை தீர்க்க முயல்வீர்கள். சோம்பலைத் தவிர்க்க வேண்டும். இன்று நிதானமான நன்மையைத்தான் எதிர்பார்க்க முடியும். அலுவலகத்தில் உங்கள் பேச்சினால் நன்மை விளையும்.

**மீனம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மற்றவர்களின் பிரச்னையைத் தீர்த்து வைப்பீர்கள். தலைமையில் உள்ளவருக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

# சிறப்பு முகாம்களை மூடி அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும்

## தமிழ் நாடு அரசிடம் சீமான் அவசர கோரிக்கை

சென்னை, ஓக. 20

சிறப்பு முகாம்களை மூடி அவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசை “நாம் தமிழர்“ கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

திருச்சி சிறப்பு முகாமில் இலங்கை தமிழர்கள் 78 பேர் உட்பட வங்கதேசம், நைஜீரியா, சூடான், பல்கேரியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 116 பேர் உள்ளனர். தண்டனை காலம் முடிந்த இலங்கை தமிழர்கள், தங்களை விடுதலை செய்ய வலியுறுத்தி தொடர்போராட்டத்தில்ஈடுபட்டு வந்தனர். இதையடுத்து, கடந்த ஜூலை 15ஆம் திகதி 10 இலங்கை தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இதனால், மற்றவர்களும் தங்களை விடுதலை செய்யக் கோரி கடந்த 11ஆம் திகதி



முதல் தொடர் உண் ணாவிரதப் போராட்டத்தில்ஈடுபட்டு வந்தனர்.

நேற்று முன்தினம் திடீரென 14 பேர் தூக்க மாத்திரை சாப்பிட்டும், ஒருவர் வயிற்றை கத்தியால் கீறியும் தற்கொலைக்கு முயற்சி செய்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த அதிகாரிகள் உடனடியாக அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இதுகுறித்து சீமான் ட்விட்டரில், “சிறப்பு முகாம் எனும் பெயரில் வதைக்கூடங்களில் அடைக்கப்பட்டு, கொடுந்துயருக்கு ஆளான தங்களை விடுதலை செய்யக்கோரி 15 நாட்களுக்கும் மேலாக பட்டினிப் போராட்டத்தை முன்னெடுத்த திருச்சி முகாமிலுள்ள ஈழச்சொந்தங்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட செய்தியறிந்து பதற்றமும், பெரும் மனவேதனையுமடைந்தேன். தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்களுக்கும், கொடும் சித்ரவதைகளுக்கும் ஆளாக்கப்படும் அவர்களது விடுதலை கோரிக்கையானது மிக நியாயமானது. ஆகவே, அவர்களின் தார்மீகக் கோரிக்கையை ஏற்று, சிறப்பு முகாம்களை மூடி அவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென தமிழக அரசை வலியுறுத்துகிறேன்” என்று பதிவிட்டுள்ளார்.

# கடற்படை தளங்கள் மீது “ட்ரோன்“ பறக்க தடை

சென்னை, ஓக. 20

தமிழகத்தில் உள்ள அனைத்துக் கடற்படை தளங்கள் மீது ட்ரோன் உள்ளிட்டவை பறப்பதற்கு நேற்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சென்னையில் ஐஎன்எஸ் அடையாறு, அரக்கோணத்தில் ஐஎன்எஸ் ராஜாளி, ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் உள்ள ஐஎன்எஸ் பருந்து, திருநெல்வேலியில் ஐஎன்எஸ் கட்டபொம்மன் உள்ளிட்ட கடற்படை தளங்கள் உள்ளன. இந்த கடற்படைதளங்களுக்கு பாதுகாப்பை மேலும் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்தக் கடற்படை தளங்கள் மீது ட்ரோன்கள், ஆளில்லா விமானங்கள் உள்ளிட்டவை பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், தடை செய்யப்பட்ட இப்பகுதியில் ட்ரோன்கள் உள்ளிட்டவை இயக்க சம்பந்தப்பட்ட அரசு துறைகள், தனியார் ஏஜென்சிகள், பொது சிவில் விமான இயக்குநரகத்திடம் முன் அனுமதி பெற வேண்டும். ஒப்புதல் கிடைத்த பிறகு, அதற்கான அனுமதி கடிதத்தை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான கடற்படை தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என, பாதுகாப்புத் துறை பத்திரிகை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# அ.தி.மு.க. இரண்டாவது நாளாக பகிஷ்கரிப்பு

சென்னை, ஓக. 20

கோடநாடு விவகாரம் தொடர்பாக சட்டசபை கூட்டத்தில் இரண்டாவது நாளாக நேற்றும் அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் பங்கேற்கவில்லை. திருத்தப்பட்ட பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட் மீதான 4 ம் நாள் விவாதம் மற்றும் பதிலுரை நேற்று நடைபெற்ற போது அவர்கள் சபையில் இருக்கவில்லை.

நேற்று முன்தினம் சட்டசபை கூட்டத்தில் கோடநாடு விவகாரத்தில் சபையில் இருந்து எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, துணைத்தலைவர் ஓ.பன்னீர்செல்வம் உள்பட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தனர். பின்னர் பொய் வழக்கு போடுவதாக கோஷம் எழுப்பி சட்டசபை வளாகத்தில் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரு நாட்களுக்கு பேரவை நிகழ்ச்சிகளில் பங்கேற்க மாட்டோம் எனவும் தெரிவித்து இருந்தனர். இந்நிலையில், நேற்று சட்டசபை கூட்டம் தொடங்கியதும் சபை முன்னவர் துரைமுருகன், எழுந்து நேற்று நடைபெற்ற நிகழ்வு தொடர்பாக ஊடகங்களில் சில செய்திகள் வெளியாகியிருக்கிறது. இது குறித்து பேரவையில் எடுத்துரைக்க இருப்பதாக கூறினார். அவர் கூறியதாவது:-

“செய்தித்தாள்களில் சட்டசபையில் கூச்சல், குழப்பம். அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வெளியேற்றம் என்ற செய்தி வந்துள்ளது. இது தவறான செய்தி. அ.தி.மு.க.வினர் வெளியேற்றப்படவில்லை. அவர்கள் தாமாகவே வெளியேறினார்கள்” என கூறினார்.

# கொடநாடு விவகாரம்: கவர்னரிடம் முறையீடு

சென்னை, ஓக. 20

கொடநாடு கொலை, கொள்ளை சம்பவம் தொடர்பாக, தமிழக ஆளுநரிடம் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் நேற்று முறையிட்டனர். இது தொடர்பான மகஜர் ஒன்றையும் கையளித்தனர். அவர்களுடன் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் சென்றார்கள்.

கொடாநாடு வழக்கில் சம்பந்தப்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்டனர். இதில், முக்கிய குற்றவாளி ஒருவர் விசாரணைக்கு ஆஜராகி பரபரப்பு வாக்குமூலம் அளித்தார். அப்போது, முன்னாள் முதலமைச்சரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியிடம், கோடநாடு எஸ்டேட்டில் கொள்ளைபோன சில முக்கிய ஆவணங்களை அளித்ததாக அவர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.



இந்த தகவல் செய்தியாக வெளிவந்த நிலையில், நேற்று முன்தினம் சட்டசபை தொடங்கியதும் எடப்பாடி பழனிசாமி எழுந்து இந்த விவகாரம் தொடர்பாக பேச முயன்றார். சபாநாயகர் அப்பாவு அதற்கு அனுமதி அளிக்கவில்லை. அதனையடுத்தே அ.தி.மு.கவினர் வெளிநடப்பு செய்தனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட எடப்பாடி பழனிசாமி, “திட்டமிட்டு அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு என்னை பழிவாங்க பார்க்கிறார்கள். கொடநாடு வழக்கில் என் பெயரை சேர்க்க சதி செய்கிறார்கள்” என்று அரசை குற்றம்சாட்டினார்.

இது தொடர்பாகவே நேற்று ஆளுநரிடம் அவர்கள் முறையிட்டுள்ளார்கள்.

ஈழநாடு



# தொற்று அறிகுறிகள் தென்படும்போது அவற்றை உதாசீனப்படுத்தவேண்டாம்

## விசேட வைத்திய நிபுணர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 20

**வைரஸ் தொற்றுக்கான சாதாரண அறிகுறிகள் தென்படும்போது அவற்றை உதாசீனப் படுத்தவேண்டாமென வைத்திய சேவைகள் தொடர்பான பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் லால் பனாப்பிட்டி வலியுறுத்தியுள்ளார்.**

சமூகத்திலிருந்து நேரடியாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றவர்களுக்கே தற்போது ஒட்சிசன் தேவைப்பாடு அதிகம் காணப்படுவதாக லால் பனாப்பிட்டி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, தொற்றுக்கான சாதாரண அறிகுறிகள் தென்படும் போது அவற்றை உதாசீனப் படுத்தாமல், உடனடியாக வைத்தியர்களை நாடி ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை சிலர், தாம் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளோம் என்பதை அறியாத நிலையில் உள்ளனர்.

இத்தகையவர்களினால்தான் தீவிர நிலைமையை அடையும் வீதமும் அதிகமாகக் காணப்படுகிறது எனவும் லால் பனாப்பிட்டி கூறினார்.



### உயிரிழந்து கரையொதுங்கிய திமிங்கலம்

கொழும்பு, ஓக. 20

மாத்தறை-பொல்ஹேன கடற்கரையில் இறந்த நிலையில் திமிங்கலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அப்பகுதி மக்கள் இது தொடர்பில் தகவலளித்துள்ளனர். அத்துடன், திமிங்கலம் உயிரிழந்தமைக்கான காரணம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொவிட் தடுப்பூசி பெறாதோர் உடனே பெற்றுக்கொள்ளுங்கள்

## யாழ். கட்டளைத் தளபதி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ். மாவட்டத்தில் தடுப்பூசியை பெறாதோர் அதனை உடனே பெற்றுக் கொள்ளுங்கள் என மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடிதுவக்கு தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று இராணுவத்தினரின் நடமாடும் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்த பின் ஊடகங்களுக்கு கருத்தரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டுவரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டம் அதாவது வீடுகளிலிருந்து தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசி பெறமுடியாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டம் நேற்று யாழ்.மாவட்டத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாக யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று இந்த நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகர் பகுதிகளை உள்ளடக்கி இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வேலைத் திட்டத்துக்கு ராணுவத்தினரின் மருத்துவப் பிரிவினர் பயன்படுத்தப்படுகிறார்கள். தற்போது மக்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவுகிறது. தடுப்பூசியைப் பெற விருப்பம் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

அவ்வாறான ஒரு நிலைமை வேண்டாம். நாடு பூராகவும் இந்த தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே எதிர்வரும் காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தடுப்பூசியைக் கட்டாயமாக பெற வேண்டும்.

கடந்த காலத்தில் தடுப்பூசி தொடர்பில் பயத்துடன் இருந்திருக்கலாம். ஆனால் இனி அந்த பயத்தை தவிர்த்து தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுங்கள்.

வீடுகளில் இருந்து தடுப்பூசி நிலையம்சென்றுதடுப்பூசிபெறமுடியாதவர்களுக்காக நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளோம். எனவே தற்போதைய நிலைமையில் தடுப்பூசி பெற்றுக் கொள்ள தவறியவர்கள் அனைவரும் தடுப்பூசி பெற்றுக் கொள்ளுங்கள்-என்றார். (அ-03)



# இராணுவத்தின் ஏற்பாட்டில் யாழில் நடமாடும் தடுப்பூசி ஏற்றும் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 20

நாட்டில் தீவிரமாக பரவி வரும்கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்தும் முகமாக இராணுவத்தின் மருத்துவப் பிரிவினால் நடமாடும் கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இராணுவத்தில் 512 ஆவது பிரிகேட் பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வீடுகளுக்குச் சென்று கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பமானது. ஏற்கனவே நாடு முழுவதும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக யாழ். மாவட்டத்தில் இந்த வேலைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நடமாடும் தடுப்பூசி வழங்கும் செயற்திட்ட ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி மற்றும் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரப் பிரிவினர் கலந்துகொண்டனர்.

# டெல்டா வைரஸ் மாறுபாட்டின் 3 பிறழ்வுகள் குறித்து விசாரணை

கொழும்பு, ஓக. 20

இலங்கையில் தற்போது விரைவாக பரவிவரும் டெல்டா கொரோனா வைரஸ் மாறுபாட்டின் பிறழ்வுகள் குறித்து அறிவதற்கு சிறப்பு விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

டெல்டா கொரோனா வைரஸ் மாறுபாட்டின் 3 பிறழ்வுகள், கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கு பரவியுள்ளதா என்பதை கண்டறியவே இந்த சிறப்பு விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் ஊடாக இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

மேலும், இந்த விடயம் தொடர்பாக முழுமையான விசாரணை நிறைவு பெற்ற பின்னர் அது தொடர்பான அறிக்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளருக்கும் தொற்று

கொழும்பு, ஓக. 20

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க மற்றும் அவரது குடும்பத்தினர் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அவரது பணியாளர்கள் இருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக கடந்த 13ஆம் திகதி முதல் தேர்தல்கள் ஆணைக் குழுவின் பிரதான அலுவலகம் மூடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

எவ்வாறாயினும், தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஊழியர்களைக் கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்வதாக அதன் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# ஆப்கானில் தலிபான் ஆட்சியை இலங்கை ஏற்றுக்கொள்ளுமா?

## இன்னும் முடிவில்லை என்கிறார் டலஸ்

கொழும்பு, ஓக. 20

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள்ஆட்சியை ஏற்பது குறித்து ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை இலங்கை ஏற்குமா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளரும் ஊடக அமைச்சருமான டலஸ்அழகப்பெரும தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சை முடிவு செய்ய உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானின் முன்னேற்றங்களை இலங்கை பின்பற்றி வருகிறது என்றும் அவர் கூறினார்.

சார்க் பிராந்தியத்தில் உள்ள நாடு என்பதால் ஆப்கானிஸ்தானின் நிலைமையை இலங்கை கவனத்தில் எடுத்துள்ளது என்றும் டலஸ் அழகப்பெரும கூறி னார்.

தலிபான்கள் தலைமையில் ஆப்கானிஸ்தானில் உருவாகும் அரசாங்கம் குறித்து இலங்கையின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சு விவாதித்து அறிவிக்கும் என்று அமைச்சர் கூறினார்.

இதேநேரம், ஆப்கானிஸ்தான் மக்கள் நாட்டைவிட்டு வெளியேற முயன்று வருவதால்இலங்கை வருத்தமடைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மூன்று வாரங்களுக்கு நாட்டை முடக்குங்கள்

## பங்காளிக்கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 20

**தற்போதைய கொரோனா நிலைமைக்கு மத்தியில் நாட்டை மூன்று வாரங்களுக்காவது முடக்கவேண்டுமென ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் 10 பங்காளிக்கட்சிகள் ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளன.**

ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்து இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் மூன்று வாரங்களுக்கு நாட்டை மூடாவிட்டால் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை வைத்தியசாலை கட்டமைப்பால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுமெனவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

எங்கள் மக்கள் கட்சியின் அத்துரலிய ரதன தேரர், ஜன நாயக இடதுசாரி முன்னணியின் வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சியின் திஸ்ஸ விதாரண, தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ஸ, பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில, தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ.எல்.எம் அதாவுல்லா, எக்ஸத் மஹஜன பெரமுன தலைவர் டிரான் அலஸ், இலங்கை கம்யுனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் வீரசிங்க, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் அசங்க நவரத்ன, யுத்துகம தேசிய அமைப்பின் கெவிந்து குமாரதுங்க ஆகியோர் குறித்த கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

குறைந்தபட்சம் 3 வாரங்களுக்காவது நாட்டை முடக்குமாறும் இல்லையெனில், இலங்கையின் நிலைமை மிகவும் பாரதூரமான நிலைக்கு செல்லுமெனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

## கொரோனா தொற்று குறித்த தரவுகளை மறைக்கவில்லை

கொழும்பு, ஓக. 20

கொரோனா தொடர்பான தரவுகள் மறைக்கப்படவில்லை என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள்கூட, உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியிடப் படுவதற்கு முன்னர், முடிவுகள் தீர்மானிக்கப்பட்டு நிறைவடையக்கூடும் என்று குறிப்பிட்ட அவர், இந்த உதாரணத்தைக் கூறுவதற்கு மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்தார்.

தரவுகள் கிடைக்கப் பெற்று அவற்றை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிட்ட காலம் தேவையெனவும் அத்துடன், அந்தத் தரவுகளை அறிவிப்பதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், தரவுகளுக்கு இடையே சில குறை பாடுகள் ஏற்படலாம் என்றும் அவற்றைத் தாங்கள் திருத்துவதாகவும் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் சுகாதார அமைச்சு என்ற அடிப்படையில் இதனைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சுப்பர்மடம் ஆலயத் திருவிழாவில் பங்கேற்றிருந்த தொற்றாளர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 20

பருத்தித்துறை சுப்பர்மடத் திடத்தைச் சேர்ந்தவர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

43 வயதுடைய சபரத்தினம் வசந்தன் என்ற குறித்த நபர் பத்து நாட்களுக்கு முன்னர் உடல்நிலை பாதிப்புக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றிருக்கின்றார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்றுவந்திருந்த நிலையில் கிசிச்சை பலனளிக்காமல் நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

இதனிடையே குறித்த நபருக்கு தொற்று ஏற்பட்டத்தை அடுத்து சுகாதாரத் தரப்பினர் மேற்கொண்ட விசாரணையில் சுப்பர்மடம் முனியப்பர் ஆலயத்தில் சுகாதார நடைமுறைகளை மீறி திருவிழா நடைபெற்றதும் திருவிழாவில் அவர் பங்கு கொண்டதும் தெரியவந்துள்ளது.

சம்பவத்தை அடுத்து திருவிழாவில் பங்கேற்ற 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் எண்மருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தப்பியோடிய கொரோனா நோயாளி காலியில் சடலமாக மீட்கப்பட்டார்!

கொழும்பு, ஓக. 20

வைத்தியசாலையில் இருந்து தப்பியோடிய கொரோனா நோயாளி ஒருவர் வீதியோரத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது. காலி - பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த நபரே இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அவர் தப்பியோடியுள்ளார்.

பின்னர், சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து குறித்த நபரை தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த நபர் மாதம்பே பிரதேசத்திலுள்ள ரயில் கடவைக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



## வைத்தியசாலைகளின் பராமரிப்பு திறன்; அறிக்கையிடுமாறு ஜனாதிபதி பணிப்பு!

கொழும்பு, ஓக. 20

நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் கொவிட் -19 தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்குரிய திறன் குறித்த விரிவான அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுகாதார அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக இராணுவத் தளபவதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொவிட் -19 தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், இறப்புகளைத் தடுக்க தடுப்பூசிகளின் அவசியம் எனவும் சவேந்திர சில்வா கூறினார்.

## யாழ். மோட்டார் போக்குவரத்து பிரிவின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம்

### அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ். மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார் .

யாழ்.மாவட்ட செயலகத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று சற்று தீவிரமடைந்த நிலை காணப்படுகின்றது. இறப்புகளும் அதிகரித்து செல்கின்ற போக்கு காணப்படுகின்றது.

இந்த நிலையில் அரசாங்கம் அறிவித்திருக்கும் புதிய சுகாதார விதிமுறைகளை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் சுகாதாரத் திணைக்களம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் இணைந்து செயற்படுத்தப்படுகின்றன.

அந்த வகையிலே யாழ். மாவட்ட செயலகத்தின் சேவை வழங்குதல் பற்றியும் ஆய்வு செய்து தற்காலிகமாக சில கட்டுப்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

ஏனென்றால் தற்பொழுது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பணியாளர்களை சேவைக்கு அழைத்திருக்கின்றோம்.

அதே நேரத்தில் மக்கள் அதிகளவில் ஒன்று கூடுவதை தடுக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அதேபோல கொன்சியூலர் பிரிவு மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்கள நடவடிக்கைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செயற்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் மோட் டார் போக்குவரத்துத் திணைக்களம் தன் நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி அதனை மீள ஒரு ஒழுங்கு முறையில் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு பிற்பாடு ஆரம்பிக்கக்கூடிய செயற்பாட்டை முன்னெடுத்திருக்கின்றோம். எனவே பொது மக்கள் மிகவும் அத்தியாவசிய நோக்கங்களுக்காக மாத்திரமே மாவட்ட செயலகத்திற்கு வருகை தரவேண்டும்.



எனினும் தற்போதுள்ள சூழ்நிலையில் இன்றும்(நேற்று) நாளையும்(இன்றும்) இந்த கிளைகளை மூடி சேவைகளை நிறுத்தியுள்ளோம். எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து குறிப்பிட்ட திணைக்களங்களுக்குரிய சேவைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செயற்படுத்தப்படும். அதே போல் மோட்டார் திணைக்களத்தின் எழுத்துப் பரீட்சை மற்றும் பிரயோக ஓட்டப்பயிற்சி என்பன தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்த மோட்டார் திணைக்களத்துக்கு பொது மக்கள் அதிகளவில் ஒன்று கூடுவதன் காரணமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் மோட்டார் போக்குவரத்து பிரிவினை தொடர்பு கொள்வதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அந்த பதிவின் ஊடாக தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். ஏற்கனவே மோட்டார் திணைக்களம் அறிவித்துள்ள புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது-என்றார்.

## வெளிநாட்டிலிருந்து வருவோரின் விதிமுறைகளில் மீளவும் மாற்றம்

### பி.சி.ஆர் பரிசோதனை கட்டாயம்

கொழும்பு, ஓக. 20

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் நபர்களுக்கு பொருந்தும் தனிமைப்படுத்தல் விதிமுறை மீண்டும் திருத்தப் பட்டுள்ளது.

அதன்படி, பார்வையாளர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நட்சத்திர விடுதி (ஹோட்டல்) அல்லது தனிமைப்படுத்தப்பட்ட நிலையம் அல்லது சுகாதார பராமரிப்பு நிலையத்துக்கு அனுப்பப் படுவார்கள்.

முழுமையாக தடுப்பூசி போட்ட பின் வருபவர்கள் நாட்டுக்கு வருகை தந்த பின்னர் பி.சி. ஆர் பரிசோதனை செய்யவேண்டும். பரிசோதனையில் தொற்று இல்லை என அறிக்கை கிடைத்தால், கொவிட்-19 தடுப்பூசியின் ஒரு டோஸ் எடுத்தவர்கள் அல்லது இரண்டு டோஸ் எடுக்காதவர்களும் 14 நாள்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

தொற்று இல்லை என பி. சி.ஆர் முடிவைக் கொண்டவர்கள் மற்றும் கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றவர்கள் தனிமைப்படுத்தப்பட மாட்டார்கள்.

எவ்வாறாயினும், நாட்டுக்கு வந்தவுடன் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவு தொற்று உள்ளதாக கிடைத்தால் மற்றும் வருகையின்போது தொற்று இல்லை என அறிக்கை கிடைத்தாலும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலின் முடிவில் தொற்று உள்ளதாக முடிவு உள்ளவர்கள் உடனடியாக சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த முறை இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு பொருந்தும் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# உடனடியாக ஊரடங்கை அமுல்படுத்தவேண்டும்!



## சுதந்திரக் கட்சியும் அவசர கோரிக்கை

கொழும்பு, ஓக. 20

**கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும், அதிகரித்துச் செல்லும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காகவும் குறைந்த பட்சம் சில வாரங்களுக்காவது நாட்டில் ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்துவது அவசியம் என சிறி லங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அரசாங்கம் சிந்திக்கவேண்டுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

விசேட மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்களின் வேண்டுகோளுக்கு அமைய மூன்று வாரங்களுக்காவது நாட்டை மூடுமாறும், இந்த தருணத்தில் சுகாதார ஆலோசனைக்கு அமைவாக செயற்படுவதே சிறந்தது எனவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இது ஒரு கடினமான சூழ்நிலை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## சுகாதார வைத்திய அதிகாரிக்கு கொரோனா!

கொழும்பு, ஓக. 20

பிலியந்தலை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் இந்திக எல்லாவல கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் காணப்பட்டதைத் தொடர்ந்து, அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் இவ்வாறு தொற்று உறுதியாகியுள்ளது.

தற்போது குறித்த அதிகாரி வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய வளாகத்தில் கிருமி தொற்றுநீக்கம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## சிப்பிமடுவில் கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, ஓக. 20

மட்டக்களப்பு சிப்பிமடுவில் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பிமடு பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டொன்று நேற்று புதன்கிழமை இரவு 6.00 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

ஆயித்தியமலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து தாண்டியடி விசேட அதிரடிப்படையினரும், இணைந்து குறித்த கைக்குண்டை மீட்டுள்ளனர்.

கடந்த யுத்த காலப்பகுதியில் கைவிடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், ஆயித்தியமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 35 தொன் ஒட்சிசனை ஏற்றிக்கொண்டு இலங்கை வருகிறது கடற்படை கப்பல்!

கொழும்பு, ஓக. 20

இந்தியாவில் இருந்து 35 தொன் ஒட்சிசனை ஏற்றிக் கொண்டு சக்தி என்ற கடற்படைக் கப்பல் நேற்று காலை இலங்கைக்குப் புறப்பட்டது.

இலங்கையில் கொவிட் தொற்று நோயாளர் தொகை அதிகரித்துள்ளதுடன், ஒட்சிசன் தேவையும் உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு இரண்டு ஒட்சிசன் கொள்கலன்களை அவசரமாக இந்தியா வழங்கியுள்ளது.

இந்த இரண்டு பாரிய ஒட்சிசன் கொள்கலன்களை ஏற்றிக் கொண்டு சக்தி என்ற இலங்கை கடற்படைக் கப்பல் நேற்று புறப்பட்டது.

இதேவேளை - 100 மெற்றிக் தொன் ஒட்சிசனை இந்தியாவி லிருந்து இறக்குமதி செய்ய இலங்கை அரசு திட்டமிட் டுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன், தேவைக்கு ஏற்ப மேலதிக ஒட்சிசனை இந்தியாவிடம் இருந்து வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# நாட்டை முழுமையாக முடக்கவேண்டும் அரசு

## மகாநாயக்கர்களும் அவசர கோரிக்கை

கொழும்பு, ஓக. 20

கொரோனா மற்றும் டெல்டா வைரஸ் தொற்றுகள் பரவியுள்ள நிலையில், நாட்டை ஒரு வார காலமாவது முழுமையாக முடக்குமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

சுகாதாரப் பிரிவினர்களின் கருத்துக்களை பரிசீலித்து உடனடியாக முடக்கத்தை அமுல்படுத்துமாறும் மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# வவுனியாவில் மேலும் 146 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது

வவுனியா, ஓக. 20

வவுனியாவில் மேலும் 146 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜென் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 146 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

# புதுக்குடியிருப்பில் வர்த்தகம் ஒரு வாரத்துக்கு இடைநிறுத்தம்

முல்லைத்தீவு, ஓக. 20

கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் வர்த்தக நடவடிக்கைகளை ஒரு வாரத்துக்கு இடைநிறுத்துவது என்று வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து வர்த்தகம் வர்த்தகர்களுக்கும் மக்களுக்கும் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புதுக்குடியிருப்பு பிரதேசமானது கொரோனா தொற்றினால் கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதால் அனைத்து உரிமையாளர்களையும் பணியாளர்களையும் மக்களையும் இந்தக் கொடிய நோயில் இருந்து பாதுகாப்பதற்காக எமது வர்த்தகர் சங்க நிர்வாகம் கூட்டப்பட்டு ஒரு வாரத்துக்கு வர்த்தக நிலையங்களை மூடுவது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நாளை அதிகாலை 4.00 மணியில் இருந்து 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை வரைக்கும் ரயர்க்கடை(ரயர் ஒட்டுபவர்கள் மட்டும்),, மருந்தகம் (பாமசி)தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றீர்கள்.

இந்த அறிவித்தலை மதிக்காது தங்களது வர்த்தக நிலையங்களை திறந்தால் தங்களுக்கு எதிராக புதுக்குடியிருப்பு சுகாதாரப் பிரிவினரின் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தாங்களும் தங்களது வர்த்தக நிலையங்களும் தனிமைப்படுத்தப்பட்டு அன்ரிஜென் பரிசோதனையும் பி.சி.ஆர் பரிசோதனையும் மேற்கொள்ளப்படும்.

அத்தோடு புதுக்குடியிருப்பு அழகக சங்கத்தின் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாகத்தினரும் இந்த ஒன்று கூடலில் பங்கேற்றிருந்தனர். எனவே அழகக சங்கத்தினரும் இந்த நடைமுறையினை பின்பற்றி தங்களது கடைகளையும் மூடி ஒத்துளைப்பு வளங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா சிகிச்சை மையமாக கொழும்பு பெரிய பள்ளிவாசல்



கொழும்பு, ஓக. 20

நாட்டில் கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதன் காரணமாக வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கொரோனா நோயாளர்களுக்கு உதவிடும் வகையில் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஒரு பகுதியை கொரோனா சிகிச்சை நிலைய மாக மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

இதற்காக சுகாதார அமைச் சிடம் அனுமதிக்கு கோரியுள்ள நிலையில், அனுமதி கிடைத்தவுடன் அங்கு கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறியமுடிகிறது.

(அ)

# பருத்தித்துறையில் விபத்து

யாழ்ப்பாணம், ஓக. 20

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தி (சித்தப்பா பூங்கா) பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் சிக்கிப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை நகர் பக்கமாக இருந்து மோட்டார் சைக்கிளில் வந்த பெண் தம்பசிட்டி வீதியில் திரும்ப முற்பட்ட போது பருத்தித்துறை நோக்கி வந்த வான் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற பெண் காயத்திற்குள்ளாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ-2)

# பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிப்பு




கொழும்பு, ஓக. 20

பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட உள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, ஒரு கிலோ கேக்கின் விலையை 100 ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இந்த விலை உயர்வு நடைமுறைக்கு வரும் என சங்கத்தின் தலைவர் என். கே.ஜயரட்ன தெரிவித்தார்.



# கொரோனா பெருந் தொற்றும் இளைய தலைமுறையினர் எதிர்கொள்ளும் நெருக்கடியும்

**சம்பத் தேசப்பிரிய**

> **சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐ.நா. சமவாயத்தின் படி, குழந்தைக்கு ஏற்படும் உளவியல் தாக்கத்தை குறைப்பதற்கு அனைத்து நாடுகளும் பொறுப்பாகும். யுனிசெப் பதிவுகளின்படி, போரினால் பாதிக்கப்பட்டவர்களில் 80 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.**

கொவிட் -19 காரணமாக இளைய தலைமுறை இன்று எதிர்கொள்ளும் நெருக்கடியைப் பற்றி சமூகம் விவாதிக்கத் தொடங்கியிருக்கின்றது. சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் மட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டம், பாடசாலைகள் பூட்டப்பட்ட நிலை மற்றும் இணைய வழிக் கல்வியால் ஏற்படும் மன அழுத்தம் ஆகியவை உள்ளடங்கும். பெருந்தொற்றுக்களின் போது சிறுவர் துஷ்பிரயோகம் 40% சதவிகிதத்தால் அதிகரித்துள்ளது என்று சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் 20% சதவிகித சிறுவர்களும், 10% சதவிகித சிறுமிகளும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகம் என்பது பாலியல் சுரண்டல் மட்டுமா? இல்லை. குழந்தைகளின் உள துஷ்பிரயோகம் குறித்து பொறுப்பான உத்தியோகத்தர்கள் கணக்கெடுப்புகளை நடத்துவதாகத் தெரியவில்லை.

கொவிட் -19 கட்டுப்பாட்டுப் பணிகளில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். வடக்கு மற்றும் தெற்கிலுள்ள நகரங்களில் வெளிச்சமான பகல் நேரத்தில் விளக்குகள் ஒளிர இராணுவ மோட்டார் சைக்கிள்களில் படையினர் ரோந்து செல்கின்றனர். தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறும் நபர்கள் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இந்த எல்லா நிகழ்வுகளாலும் சிறுவர்களுக்கு வழங்கப்பட்ட செய்தி என்ன? ஒரு தமிழ் அல்லது முஸ்லீம் சிறுவன் எழுப்பிய கேள்விகளுக்கு பெற்றோர் அளிக்கும் பதில்கள் என்னவாக இருக்கும்?

சிங்கள பௌத்த, தமிழ், முஸ்லீம் பாடசாலைகளில் சில இனவெறியான ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு தீவிரப் போக்கான கருத்துக்களை போதிக்கின்றார்கள் என்பது இரகசியமானதல்ல. பாதுகாப்புப் படையினர் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் தீவிரவாத நடவடிக்கைகளை அடக்குவதில் ஈடுபட்டுள்ளனர். தென்னிலங்கையில் சில தனிப்பட்ட மோதல்கள் சமுதாய மோதல்கள் என்று விபரிக்கப்பட்டன, முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். முஸ்லீம் தீவிரவாதிகள் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்களின் மூலமாக நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்றதுடன் காயப்படுத்தினர்.

இந்த சம்பவங்களால் சிறுவர்கள் உடல் மற்றும் உள உளைச்சலுக்கு ஆளானார்கள். இருப்பினும், அவை பிரதான உரையாடலில் இருக்கவில்லை. இந்த குழப்பமான சூழ்நிலைக்கு மத்தியில் வளர்க்கப்படும் சிறுவர்கள் நாளைய குடிமக்களாக இருப்பார்கள். அவர்களின் மனநிலை என்னவாக இருக்கும்? இதைப் பற்றி நாம் கலந்துரையாடும்போது, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் சிறுவர்களின் உரிமைகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயம் (UNCRC) ஒவ்வொரு குழந்தையின் இனம், மதம் அல்லது திறன்களைப் பொருட்படுத்தாமல் அவர்களின் சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை வகுக்கிறது. குழந்தைக்கு சுதந்திரத்திற்காக குரல் கொடுக்க உரிமை உண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் பிறப்பிலிருந்து ஒரு பெயரும் தேசிய அடையாளமும் உண்டு. பெற்றோரை அறிந்து கொள்வதற்கும் அவர்களிடமிருந்து அன்பைப் பெறுவதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு. அதை யாராவது தடுத்தால், எதிர்ப்பதற்கு குழந்தைக்கு உரிமை உண்டு. ஒரு கருத்தை வெளிப்படுத்துவதற்கான குழந்தையின் உரிமையை நாம் மதிக்க வேண்டும். சிறுபான்மை சமூகங்களின் குழந்தைகளுக்கு அவர்களின் கலாச்சாரம், மதம் மற்றும் மொழிக்கான உரிமைகள் உள்ளன. மோதல்களின் போது, யுத்தம் மற்றும் மோதல்களில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு குழந்தைக்கு உரிமை உண்டு. குழந்தைகளை இராணுவச் சேவையில் ஈடுபடுத்துவதும் சட்டத்திற்கு எதிரானது. குழந்தைகளுக்கு அரச பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கு சித்திரவதை இல்லாத மற்றும் பராமரிப்புள்ள சூழலை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐ.நா. சமவாயத்தின் படி, குழந்தைக்கு ஏற்படும் உளவியல் தாக்கத்தை குறைப்பதற்கு அனைத்து நாடுகளும் பொறுப்பாகும். யுனிசெப் பதிவுகளின் படி, போரினால் பாதிக்கப்பட்டவர்களில் 80% க்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

வடக்கு மற்றும் தெற்கின் சிறுவர்கள் 30 ஆண்டுகால யுத்தத்தால் ஏற்பட்ட விரக்திக்கு ஆளானார்கள், இது நடத்தை தொடர்பான பிரச்சினைகளுக்கு வழிவகுத்தது. மோதல்கள் ஏற்படும் நாடுகளில் உள்ள சிறுவர்களும் உளநல அபாயங்களை எதிர்கொள்கின்றனர். இந்த நிலைமைகளை யாரும் கணக்கெடுத்து மதிப்பீடு செய்வதாக தெரியவில்லை. பிரதான ஊடகங்கள் மேலும் பரவச்செய்யும் சிங்கள இனவெறி மற்றும் மத தீவிரவாதமும் சிறுவர்களை மேலும் பாதிக்கின்றன. ஊடகம், சமூகம் மற்றும் பெற்றோர்களால் எதிர்காலத்திற்காக உருவாக்கப்படும் குழந்தை வெறுப்பு நிறைந்த ஒரு குழந்தை அத்துடன் அது, நல்லிணக்கத்தின் மத்தியில் வளர்க்கப்பட்ட ஒரு நபரல்ல.

ருவாண்டா, மொசாம்பிக் மற்றும் கம்பூசியா போன்ற மோதல்களில் உள்ள நாடுகளிலிருந்தான அறிக்கைகளின்படி, கொடூரங்களுக்கு ஆளான குழந்தைகள் பிந்திய மனஉளைச்சல் சீர்கேட்டிற்கு (PTSD) ஆளாகியிருப்பது இருப்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இலங்கை குழந்தைகளும் விரக்தியின் அறிகுறிகளைக் காட்டுவதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். 1983 ஆம் ஆண்டில் வன்முறையை எதிர்கொண்ட சில குழந்தைகள் தற்போது பெரியவர்களாக வெளிநாடுகளில் வாழ்கின்றன. தாங்கள் இன்னமும் பயத்தால் பாதிக்கப்படுகிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

வன்முறைக்கு ஆளான சிறுவர்கள் கற்றல் பலவீனங்களைக் காட்டியுள்ளனர். மோதல் பிராந்தியங்களில் வாழ்ந்த சிறுவர்கள் படுக்கையில் சிறுநீர் கழித்தல், விரல்களை சூப்புதல், இருள் பற்றிய பயம் போன்ற அறிகுறிகளைக் காட்டியுள்ளனர். முன்னாள் குழந்தைப் போர்வீரர்கள் கோபம், தற்கொலைக்கான போக்கு, தனிமைப்படுத்தப்படுவதற்கான பயம் போன்றவற்றைக் காட்டியுள்ளனர். வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் குழந்தைகள் மனச்சோர்வின் அறிகுறிகளைக் காட்டியுள்ளதுடன், அவர்களில் சிலர் பெரியவர்களானதும் போதைக்கு அடிமையாகியுள்ளனர், என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. இவை அனைத்தும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஆரோக்கியமான எதிர்கால தலைமுறையை உருவாக்குவதற்கு, இனம் மற்றும் மதத்தின் அடிப்படையிலான அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் விடுபட்ட ஒரு சமூக முன்னிலை நமக்குத் தேவை என்று இவை அனைத்தும் ஆலோசனை வழங்குகின்றன. ■



# ஆப்கானில் தலிபான்களின் வெற்றி இந்தியாவுக்கு அக்னி பரீட்சையா?

**விகாஸ் பாண்டே**

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் இந்த வேகத்தில் கைப்பற்றியது உலகம் முழுவதும் உள்ள பாதுகாப்பு மற்றும் ராஜீய நிபுணர்களை திகைக்க வைத்திருக்கிறது. காபூல் நகரம் வீழ்ச்சியடைந்ததும் என்ன செய்வது என்று தெரியாமல் இருபது ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் செய்திருக்கும் முதலீடுகளையும், உடைமைகளையும் விட்டுவிட்டு வெளிநாடுகள் அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன. அதிகாரிகளையும் குடிமக்களையும் அவை மீட்டு வருகின்றன.

தாலிபன்களின் வெற்றி தெற்காசிய நாடுகளின் புவிசார் அரசியலில் குறிப்பிடத்தகுந்த மாற்றத்தை ஏற்படத்தக்கூடும். இது இந்தியாவுக்கு அக்னிப் பரீட்சையாக இருக்கலாம். ஆப்கானிஸ்தானின் எதிர்காலத்தில் முக்கியப் பங்கு வகிக்கப் போகும் பாகிஸ்தான் மற்றும் சீனவுடனான எல்லைச் சிக்கல்கள், பதற்றமான உறவுகள் ஆகியவை கவனிக்கப்பட வேண்டிய காரணிகளாக இருக்கும்.

பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லை, அதிக கட்டுப்பாடு இல்லாதது. இது இரு தரப்பு உறவில் மிக முக்கியமான அம்சம். இப்போது ஆப்கானிஸ்தானில் பெரிய அளவில் செயலாற்ற வேண்டும் என்று சீனாவும் விரும்புகிறது. சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ, தாலிபன் தலைவர்கள் கடந்த மாதம் பெய்ஜிங்கில் சந்தித்தார். ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சீனா இனியும் அமைதியாக இருக்கப் போவதில்லை என்பதையே இது காட்டுகிறது.

இந்தப் புதிய புவிசார் அணிசேர்க்கை “அனைத்தையும் தலைகீழாக மாற்றும்” என்கிறார் ஆப்கானிஸ்தான் மற்றும் சிரியாவுக்கான முன்னாள் இந்தியத் தூதர் கவுதம் முகோபாத்யாயா. காபூலில் இருந்த ஜனநாயக அரசு, மேற்கத்திய நாடுகள், மற்றும் இந்தியா போன்ற பின ஜனநாயக நாடுகளுக்கும் இடையேயான ஓர் கூட்டணியாக ஆப்கானிஸ்தான் இதுவரை இருந்து வந்தது. ஆனால் “மகா ஆட்டத்தின்” புதிய ஆட்டக்காரர்களாக பாகிஸ்தான், ரஷ்யா, ஈரான், சீனா ஆகிய நாடுகளை உலகம் இனி பார்க்கக்கூடும்

இதை இந்தியாவுக்கு இழப்பாகவும் பாகிஸ்தானுக்கு பெரிய வெற்றியாகவும் பலர் கருதுகின்றனர். ஆனால் இது மிகவும் மேலோட்டமான பார்வை என்கிறார் இந்தியாவின் முன்னாள் அரசுமுறை அதிகாரி ஜிதேந்திரநாத் மிஸ்ரா. ஏனென்றால் ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான எல்லையை தாலிபன்கள் ஒருபோதும் அங்கீகரித்தது இல்லை. இது பாகிஸ்தானுக்கு சங்கடத்தை ஏற்படுத்தக்கூடியது. “தங்களது எல்லையை தாலிபன்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது. இதற்கே முன்னுரிமை அளிக்கும்” என்று கூறினார் முகோபாத்யாயா..

இருப்பினும் ஆப்கானிஸ்தானில் தாலிபன்களின் ஆட்சி அமைவது இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானுக்கு உத்திசார் ஆதாயத்தை அளிக்கிறது என்பதும் உண்மைதான்.
“இஸ்லாமாபாத் தான் எப்போதும் விரும்பிவந்த ஒன்றை இப்போது பெற்றிருக்கிறது” என்கிறார் வாஷிங்டனில் உள்ள வில்சன் மையத்தின் சிந்தனைக் குழுவின் துணை இயக்குநர் மைக்கேல் குகல்மேன். அது தன்னால் எளிதில் செல்வாக்குச் செலுத்த முடிகிற ஓர் ஆப்கானிஸ்தானிய அரசாங்கம்.

“ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானுக்கு மிகப்பெரிய கேந்திர இலக்குகள் உள்ளன” என்று கூறுகிறார் குகல்மேன். “இந்த நேரத்தில் அது தன்னை மிகப்பெரிய வெற்றியாளராக பார்க்கிறது.” அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே வளர்ந்து வரும் உறவு அல்லது ஆப்கானிஸ்தானின் முன்னாள் அதிபர் அஷ்ரப் கானியுடன் தங்களுக்கு

> **“ பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லை, அதிக கட்டுப்பாடு இல்லாதது. இது இரு தரப்பு உறவில் மிக முக்கியமான அம்சம். இப்போது ஆப்கானிஸ்தானில் பெரிய அளவில் செயலாற்ற வேண்டும் என்று சீனாவும் விரும்புகிறது. சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ, தலிபான் தலைவர்கள் கடந்த மாதம் பெய்ஜிங்கில் சந்தித்தார். ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சீனா இனியும் அமைதியாக இருக்கப் போவதில்லை என்பதையே இது காட்டுகிறது.**

இருந்த மந்தமான உறவுகளால் பாகிஸ்தான் கவலையில் இருந்தது. தங்களது பொருளாதார நிலையும் அவர்களுக்கு சிக்கலாக இருந்தது.

இப்போது தாங்கள் தான் வெற்றியாளர் என்று பாகிஸ்தான் நம்புவதற்கு காரணங்கள் உள்ளன. ஏனெனில் சீனாவுடனான “அனைத்துச் சூழல்” நட்பும் ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானுக்கு பயனுள்ளதாக இருக்கும். மேலும், பெய்ஜிங் அதன் வலிமையை காட்ட இப்போது தயங்கவில்லை. “சீனா தனது சொந்த விதிகளின்படி இப்போது ஆட்டத்தை ஆட முடியும்,” என்கிறார் மிஸ்ரா.

சீனாவிற்கு ஆப்கானிஸ்தானில் பொருளாதார நோக்கங்கள் உண்டு. அதிகரித்துவரும் கனிமங்களுக்கான தேவையை பூர்த்தி செய்ய சீனா நினைக்கிறது. ஆனால் அதைவிட முக்கியமாக கிழக்கு துர்கஸ்தான் இஸ்லாமிய இயக்கம்(ETIM) ஆப்கானிஸ்தானில் இருந்து செயல்படுவதற்குத் தடை விதிக்க தாலிபன்களை சீனா வலியுறுத்தும். சீனாவில் இஸ்லாமியர் ஆதிக்கம் உள்ள ஜின்ஜியான் மாகாணத்தில் அமைதியின்மைக்கு காரணம் இந்த இயக்கமே என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

சீனாவும் பாகிஸ்தானும் “ஆப்கானிஸ்தானில் ஒருவரது முதுகில் மற்றவர் சவாரி செய்யும்” என்று முகோபாத்யாயா கூறுகிறார். அதே நேரத்தில் கடந்த காலங்களில் மற்ற உலக வல்லரசுகளைப் போல எந்த வலையிலும் சீனா விழுந்துவிடக்கூடாது என்றும் அவர் எச்சரிக்கிறார். ரஷ்யாவும் ஈரானும் ஒரே பாதையில் இருப்பதாகத் தெரிகிறது. அவை தங்களது தூதரகங்களைக் காலி செய்யவில்லை. இரு நாடுகளின் தூதர்களும் காபூலில் இன்னும் பணியாற்றி வருகிறார்கள்.

ஆக, இந்தியா இப்போது என்ன செய்யலாம்? பாகிஸ்தான், அமெரிக்கா, ரஷ்யாவைப் போல இந்தியா ஒருபோதும் ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் மிகப் பெரிய பங்கு வகித்ததில்லை. இருப்பினும் பாதுகாப்பு மற்றும் பண்பாட்டு உறவுகளை மேம்படுத்துவதில் இந்தியா எப்போதும் முனைப்புடன் செயல்பட்டு வந்திருக்கிறது. கல்வி, வேலை அல்லது மருத்துவ சிகிச்சைக்காக ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் இந்தியாவில் வசிக்கிறார்கள்..

“இன்றைய சூழலில் ஆப்கானிஸ்தானுக்கு நல்ல வாய்ப்புகள் என்று ஏதுமில்லை. மோசமானவை அல்லது மிக மோசமான வாய்ப்புகள் மட்டுமே இருக்கின்றன” என்று கூறுகிறார் மிஸ்ரா. தாலிபன் அரசை அங்கீகரிப்பதா வேண்டாமா என்பது இப்போது இந்தியா முன்னிருக்கும் மிகப்பெரிய சவால். ரஷ்யாவும் சீனாவும் தாலிபன்களின் அரசை ஏற்றுக்கொள்ளும்போது, இந்தியாவின் நிலை கடினமாகிவிடும். 1999-ஆம் ஆண்டைப் போல தாலிபன் அரசை பாகிஸ்தான் அங்கீகரிக்க வாய்ப்புள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

தாலிபன்களுடன் தொடர்புகொள்வதற்கான ஒரு வழியைத் திறந்து வைப்பதே இந்தியாவுக்கு இருக்கும் சிறந்த வழி. ஆனால் தாலிபன்களுடனான இந்தியாவின் உறவின் வரலாற்றைக் கருத்தில் கொண்டால் இது கசப்பானதாகவே இருக்கப் போகிறது. 1999-ஆம் ஆண்டில் இந்தியன் ஏர் லைன்ஸ் விமானத்தை கடத்தியவர்களுக்கு தாலிபான்கள் அடைக்கலம் கொடுத்தனர். இந்தச் சம்பவம் இந்தியர்களின் நினைவில் செதுக்கப்பட்டிருக்கிறது. 1996 மற்றும் 1999 க்கு இடையேயான கால கட்டத்தில் தலிபான்களுடன் சண்டையிட்ட வடக்குக் கூட்டணி எனப்படும் ஆயுதக் குழுவுடன் இந்தியா எப்போதும் நெருக்கமான உறவைப் பேணி வருகிறது.

தாலிபன்கள் காபூலைக் கைப்பறிவிட்டதால், பிராந்தியம் ஸ்திரமாக இருக்கவும், சொந்த நலனைப் பாதுகாக்கவும்கடந்த காலக் கசப்புகளை ஒதுக்கிவைக்கவே இந்தியா விரும்பும். தாலிபன்கள் வெற்றி பெற்றிருப்பதால் கிடைத்திருக்கும் ஊக்கத்தைப் பயன்படுத்தி ஜெய்ஷ்-இ-முகமது, லஷ்கர் இ-தாய்பா போன்ற தீவிரவாத இயக்கங்கள் இந்தியாவுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தக்கூடும் என்ற கவலையும் இருக்கிறது.

”இந்தியா கத்தி மீது நடக்க வேண்டிய தருணம் இது” என்கிறார். லான்காஸ்டர் பல்கலைக்கழகத்தின் அரசியல் பேராசிரியரும், ஆப்கானிஸ்தான் பற்றிய புத்தகத்தின் ஆசிரியருமான அமலேந்து மிஸ்ரா. சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிராந்தியம், முஜாஹிதீன்களின் அடுத்த இலக்காக மாறிவிடாமல் இருப்பதை உறுதி செய்ய ஓர் உத்தி இந்தியாவுக்குத் தேவைப்படலாம்.

தாலிபான்களுடன் இந்தியா தொடர்ந்து பேச்சு நடத்த வேண்டும் என்பதுடன், தாலிபன் எதிர்ப்பு அணியுடன் பணியாற்றுவதில் எந்த அளவுக்கு ஆர்வங்காட்ட வேண்டும் என்பதை இந்தியா முடிவு செய்ய வேண்டும் என்றும் நிபுணர்கள் கூறுகிறார்கள். தாலிபான்கள் மீது அழுத்தம் கொடுப்பதற்காக ஓர் அணியைத் திரட்ட மேற்கு நாடுகள் திட்டமிடுகின்றன. தாலிபன் அரசுக்கு எதிரான ஒரு கூட்டணிக்கு பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஏற்கெனவே அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஆப்கானிஸ்தானின் வடக்குக் கூட்டணி மீண்டும் அணி சேர்ந்து தலிபான்களுக்கு எதிராகச் சண்டையிடுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. அதேபோல அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளுக்கும் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் கூட்டணிக்கும் இடையே யார் பெரியவன் என்ற போட்டிக்கான களமாக ஆப்கானிஸ்தான் மாறவும் வாய்ப்பிருக்கிறது. எனவே இந்தியாவுக்கு எளிதான வழிகள் ஏதும் இல்லை. ஆனால் இந்தியாவின் முடிவுகள் பிராந்திய அமைதி மற்றும் உலகளாவிய புவிசார் அரசியல் ஆகியவற்றில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

- பி.பி.சி.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
விடைகள் - I

நேரம் : 1 மணித்தியாலம்


❖ **1ஆம், 2ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள கூட்டத்தினுள் பொருந்தக் கூடிய உருவைத் தெரிவு செய்க.**

01.




1) 2) 3)

02.



1) 2) 3)

03. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களினை நன்கு அவதானிக்கவும். 1ஆவது படத்திற்கும் 2ஆவது படத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எத்தனை?




1) 2)

1) 4 2) 3 3) 1


❖ **4 ஆம், 5 ஆம் வினாக்களில் உருக்களின் கோலத்தை அவதானித்து அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.**

04.




1) 2) 3)

05.



1) 2) 3)

06. ஊடு கடத்தும் தாளில் வரையப்பட்ட இரு உருக்களை ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது தோன்றும் உரு எது?



1) 2) 3)

❖ **7ஆம், 8ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.**

வானம்பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளியும் வந்திருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது.

07. கூத்தை வாழ்த்திப் பாட்டுப் பாடுவது எது?

1) மயில் 2) வானம்பாடி 3) கிளி

08. பாடலில் வந்துள்ள பிராணிகள் எக்கூட்டத்தைச் சேர்ந்தவை?

1) மிருகங்கள் 2) பூச்சிகள் 3) பறவைகள்


09. தரப்பட்ட சொற்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய விடையைத் தெரிவு செய்க.

நிழல் - விழுதுகள் - சிறிய பழம்



1) 2) 3)

10.



தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவில் எத்தனை மடங்காகும்?

1) $\frac{1}{2}$ மடங்கு 2) 2 மடங்கு 3) 6 மடங்கு

11. வாகனத் தரிப்பிடம் ஒன்றிலுள்ள மோட்டார் கார்களினதும் மோட்டார் சைக்கிள்களினதும் எண்ணிக்கை 58 ஆகும். அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 156 ஆகும் எனில், வாகனத் தரிப்பிடத்தில் உள்ள மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 38 3) 40

12. ஜானுவிடம் உள்ள பணத்தைப் போன்று 3 மடங்கு பணம் பானுவிடம் உள்ளது. ஜானுவின் தங்கையிடம் ஜானுவிடம் உள்ள பணத்தைப் போன்று 4 மடங்கு பணம் உள்ளது. மூவரிடமும் உள்ள மொத்த பணம் ரூபாய் 320.00 எனின், பானுவிடம் உள்ள பணம் எவ்வளவு?

1) ரூபாய் 40.00 2) ரூபாய் 120.00 3) ரூபாய் 160.00

13. ரவியும் ரமணனும் ரதியும் சகோதரர்கள். ரதியின் மகன் மதன் ஆவார். ரவிக்கு ராஜா, ராம் எனும் இரு மகன்மார் உள்ளனர் எனின், ரதி ராஜாவுக்கு என்ன உறவு முறை?

1) அம்மா 2) மாமி 3) பெரியம்மா

ஈழநாடு



# தீர்வு கிடைக்கும் வரையில் தொழிற்சங்கப் போராட்டம் தொடரும்!

## - அதிபர், ஆசிரியர் சங்கங்கள் திட்டவட்டம்



கொழும்பு, ஓக. 20

தங்களுக்கான உரிய தீர்வு முன்வைக்கப்படும் வரை தமது தொழிற்சங்க போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கங்களுக்கும், அமைச்சரவை உப குழுவுக்கும் இடையில் மீண்டும் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பது குறித்து ஆராய்வதற்காக குறித்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கங்களுக்கும், அமைச்சரவை உப குழுவுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க் கிழமை குறித்த சந்திப்பு இடம் பெறவிருந்த நிலையில், பின்னர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வரை பிற்போடப்பட்டிருந்தது.

இதற்கமைய, இந்தச் சந்திப்பானது நேற்றுமுன்தினம் மாலை அமைச்சர் விமல் வீரவன்சவின் இல்லத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது, அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டன என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அது தொடர்பான அறிக்கையை இன்று வெள்ளிக்கிழமை நிதி அமைச்சிடம் கையளிப்பதாக அமைச்சரவை உப குழு தெரிவித்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும், உரிய தீர்வொன்று வழங்கப்படும் வரையில் தமது தொழிற்சங்கப் போராட்டம் இடைநிறுத்தப்படாது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் கூறினார். (இ)

# 360 ரயில்வே ஊழியர்களுக்கு கொரோனா; மூவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 20

ரயில்வே திணைக்களத்தில் இதுவரையில் 360 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை மூவர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள காரணத்தால் 10 ரயில் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இவ்வாறு மூடப்பட்ட ரயில் நிலையங்களில் கரையோர மார்க்கத்திலான 5 ரயில் நிலையங்களும் அடங்குகின்றன என்றும் ரயில்வே பொது முகாமையாளர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# நாட்டை முடக்கமாட்டோம் என்ற நிலைப்பாட்டில் அரசு இல்லை

## சுகாதார அமைச்சே இறுதி முடிவு எடுக்கவேண்டும் என்கிறார் டலஸ்



கொழும்பு, ஓக. 20

**என்ன நடந்தாலும் நாட்டை முடக்குவதில்லை என்ற கடுமையான நிலைப்பாட்டில் அரசு இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

அரசதகவல்திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“நாட்டை முடக்காதிருப்பதற்குத் தாக்கம் செலுத்தும் சில காரணிகள் தொடர்பில் அமைச்சரவையை ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். உலகில் இந்தக் கொரோனாபரவல்குறித்துமூன்று வகையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கமைய, முழுமையாக நாட்டை முடக்குவது முதலாவது நடவடிக்கையாகும்.

இரண்டாது தடுப்பூசியை 40, 50 சதவீதமளவில் செலுத்தியதன் பின்னர், நாட்டை முழுமையாகத் திறப்பது இரண்டாவது நடைமுறையாகும்.

மூன்றாவது நடைமுறையானது, ஓரளவான தரப்பினருக்குத் தடுப்பூசியைச் செலுத்தி, நாட்டைப் பகுதியளவில் திறக்கும் நிலை உலகளவில் உள்ளது.

இதற்கமைய, சுகாதாரத்துறையும், கொரோனா பரவல் கட்டுப்பாட்டு செயலணியும் நாட்டை இந்த மூன்றாவது நிலையில் வைத்திருக்கத் தீர்மானித்துள்ளன. இது தொடர்பில் சுகாதார அமைச்சு இறுதித் தீர்மானம் மேற்கொள்ள வேண்டியுள்ளது” - என்றார். (இ)

# குழிதோண்டிப் புதைக்கப்படும் தம்மிக்க பாணி சமூகவலைத்தளங்களில் வைரலாகும் வீடியோ

கேகாலை, ஓக. 20

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தக் கூடியது எனக் கேகாலைப் பகுதியிலுள்ள தம்பிக்க பண்டாரவால் கண்டுபிடிக்கப்பட்ட ‘தம்மிக்க பாணி’ தற்போது குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றது.

இது தொடர்பான காணொளியும் சமூகவலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

இலங்கையில் கொரோனாவின் இரண்டாவது அலையின் போது மேற்படி பாணியை வைத்து பெரும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

எனினும், இந்தப் பாணியை மேலதிக உணவாகக்கூடப் பயன்படுத்த முடியாது என்று சுகாதாரத் தரப்பினர் ஆய்வு மூலம் உறுதிப்படுத்தினர். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தற்போது பாணி புதைக்கப்பட்டு வருகின்றது. (இ)



# முடங்கியது கொட்டகலை நகரம்

கொட்டகலை, ஓக. 20

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொட்டகலை நகரம்நேற்று முதல் ஒருவார காலத்துக்கு முடக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களை மூடுவதற்கான தீர்மானத்தை நகர வர்த்தக சங்கம் சுயமாக முன்னெடுத்திருந்தது.

இந்தக் கோரிக்கையை ஏற்று வர்த்தக நிலையங்களை மூடிய கொட்டகலை வர்த்தகர்களுக்கு சங்கத் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் நன்றி தெரிவித்துள்ளார். (இ)

# பாராளுமன்றின் சமையலறையும் சிற்றுண்டிச்சாலைகளும் முடக்கம்



கொழும்பு, ஓக. 20

கொரோனா வைரஸ் காரணமாக பாராளுமன்றத்தின் சமையலறை மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் என்பன மூடப்பட்டுள்ளன.

பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனால் பாராளுமன்றில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் தற்காலிகமாக உணவுகளை வெளியில் இருந்து கொண்டுவருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், உணவுப் பொதிகள் பாராளுமன்ற வளாகத்துக்குள் எடுத்து செல்லப்படுவதற்கு முன்னர் பாதுகாப்புக் காரணிகளுக்காக அதனைச் சோதனைக்குட்படுத்த பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அதிகாரிகள், பணிக்குழாமினர் உள்ளிட்ட 275 பேருக்குக் கடந்த செவ்வாய்க் கிழமை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 12 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியானமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 229 பேர் கைது

கொழும்பு, ஓக. 20

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய மேலும் 229 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 55 ஆயிரத்து 402 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 52 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட் டுள்ளதுடன் 2 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# இரத்தக்களரியை தவிர்க்கவே ஆப்கானிலிருந்து தப்பினேன்!

## அஷ்ரப் கானி முதன்முறையாக விளக்கம்

காபூல், ஒக. 20

இரத்தகளரி ஏற்படுவதை தவிர்க்கவே தான் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியதாக அந்நாட்டு ஜனாதிபதியாக இருந்த அஷ்ரப் கானி தெரிவித்துள்ளார்.

தான் கார் முழுக்க பணத்தை நிரப்பிக்கொண்டு ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பியோடியதாக ரஷ்யா முன்வைத்துள்ள குற்றச்சாட்டு முழுக்க முழுக்க தவறானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் தலிபான்களின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள நிலையில் அங்கிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அஷ்ரப் கானி தப்பியோடினார். அதன் பின்னர் முதன்முறையாக நேற்றுமுன் தினம் தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட பதிவிலேயே அவர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

தலிபான்களால் பேரழிவுகள் ஏற்படுத்தப்படுவதை தவிர்க்கவே நான் ஆப்கானில் இருந்து தப்பி தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் தங்கியுள்ளேன். நான் காபூலிலேயே இருந்திருந்தால் நிச்சயம் வன்முறை வெடித்திருக்கும் எனவும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.



"தலிபான்களுக்கு எதிராக போராடிய ஆப்கான் படைகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆப்கான் ஜனாதிபதியே பொறுப்பில்லாமல் நாட்டை விட்டு தப்பியோடிய பின் எங்கள் நாட்டு படைகள் ஏன் உயிர் துறக்கவேண்டும்? என அமெரிக்காவும் நேட்டோ அமைப்பும் கேள்வி எழுப்பியுள்ளன. அங்கு நடந்தது என்ன என்று தெரியாமல் இருப்போர் என்னை எடைபோடவேண்டாம்.

தலிபான்களுடன் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை. இது எங்கள் தோல்வி. எந்த வன்முறையும் இல்லாமல் ஆட்சி அதிகாரத்தை தலிபான்களுக்கு ஒப்படைக்க விரும்பினேன். ஆனால் எனது விருப்பத்துக்கு மாறாகவே ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறினேன். 4 கார்கள் மற்றும் ஒரு ஹெலிகொப்டர் முழுக்க பணத்துடன் நான் தப்பியோடியதாக ஆப்கானுக்கான ரஷ்யத் தூதர் குற்றம்சாட்டியிருந்தார். அது தவறானது.

பணத்துடன் நான் தப்பினேன் என கூறுவது முற்றிலும் அடிப்படை ஆதாரமற்றது. அவர்கள் பொய் கூறுகிறார்கள். நான் பணத்துடன் வெளியேறினேனா? என ஐக்கிய அரபு அமீரகத்தின் சுங்க அதிகாரிகளை கேட்டு நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

எனது காலணிகளை அணியக் கூட எனக்கு நேரம் இல்லாத நிலையில் நான் எப்படி அத்தனை பணத்தைக் கொண்டு வருவேன்? எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக எனது பாதுகாப்பு அதிகாரிகள் எனக்கு அறிவுறுத்தினர். உடனே வெளியேறுமாறு ஆலோசனை வழங்கினர். அதன் பேரில்தான் நான் வெளியேறினேன்" எனவும் அஷ்ரப் கானி தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ)



# ஹெய்ட்டி நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் 2189 பேர்!

போர்ட்டுஅவ் பிரின்ஸ்,ஒக.20

ஹெய்ட்டியில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 189 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் காயமடைந்த 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கரீபியன் தீவு நாடான ஹெய்ட்டியின் டிபுரோன் தீபகற்பப் பகுதியில் கடந்த சனிக்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவுகோலில் 7.2 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகளால் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் வீடுகள் இடிந்து விழுந்தன.

அதில் வசித்த ஏராளமான மக்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் சடலங்களையும் இடிபாடுகளில் சிக்கி காயமடைந்தவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 189 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இந்நிலநடுக்கத்தால் 2 ஆயிரத்து 868 வீடுகள் இடிந்து தரைமட்டமாகியிருப்பதோடு, 5 ஆயிரத்து 410 கட்டடங்களும் சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)



# துருக்கியின் விமான தாக்குதலில் 18 குர்திஸ் போராளிகள் மரணம்!

பக்தாத், ஒக. 20

வடக்கு ஈராக்கின் சின்ஜார் நகருக்கு அருகே குர்திஸ் போராளிகளின் நிலைகளைக் குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் துருக்கி நடத்திய தாக்குதலில் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த 18 போராளிகள் கொல்லப்பட்டனர்.

குர்திஸ் போராளிகள் மருத்துவமனையாகப் பயன்படுத்தி வந்த பாடசாலைக் கட்டடம் ஒன்றை இலக்கு வைத்தே துருக்கி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் சிரேஷ்ட உள்ளூர் தலைவர் மத்லூம் ரூஸி உட்பட 18 குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த போராளிகள் கொல்லப்பட்டதாக குர்திஸ் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

குர்திஸ் விடுதலைப் படைகளை துருக்கி தீவிரவாதிகளாக அறிவித்துள்ளது. அத்துடன், வடக்கு ஈராக்கில் உள்ள குர்திஸ் போராளிகளின் நிலைகள் மீது துருக்கி அடிக்கடி வான் வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உலகப் புகழ் பொப் பாடல்களில் தமிழைப் புகுத்துகிறார் பிரியா!

## தமிழ் நான் பேசும் மொழி, ஏன் அதை எனது பாடல்களில் சேர்க்கக் கூடாது?

பேர்ண், ஒக. 20

ஈழத்தமிழ் பின்னணி கொண்ட சுவிஸ் தமிழ்ப் பாடகி பிரியா ரகு மேற்குலகின் இசைச் சந்தையில் உச்சங்களைத் தொட்டிருப்பவர். சுவிஸில் இலங்கைத் தமிழ் அகதிகளான பெற்றோருக்குப் பிறந்த பிரியா 'பொப்' பாணிப் பாடல்களால் இன்று உலகப் பிரபலமாக மாறியுள்ளார். தனது 'கமலி' என்னும் பிந்திய இசை அல்பம் ஒன்றில் அவர் தமிழ் வார்த்தைகளைப் புகுத்திப் பாடினார். உலகெங்கும் ஆங்கிலத்தில் ஒலிக்கின்ற அவரது குரலின் நடுவே இப்போது தமிழ்ச் சொற்களைக் கேட்க முடிகிறது.

ஆகப் பிந்திய தனது அல்பத்துக்கு 'சந்தோசம்' என்று பெயரிட்டிருக்கிறார்.

Leaf High, Good Love 2.0, Lockdown, Lighthouse, Anything, Chicken Lemon Rice Deli, Kamali, Forgot About, Santhosam ஆகிய பெயர் களில் பிரியா ரகுவின் பொப் இசை அல்பங்கள் வெளியாகி உள்ளன. அவரது பிந்திய பாடல்களைப் உலக ரசிகர்கள் புரியாத தமிழ்ச் சொற்களைச் செவி மடுக்கிறார்கள். அது ஏன் என்ற கேள்விகளும் எழுப்பப்படுகின்றன.

"நாங்கள் எமது பாடல்களில் தமிழ்ச் சொற்களை இணைக்கத் தொடங்கி உள்ளோம்.தமிழ் நான் பேசும் மொழி. நாமே உருவாக்குகின்ற பாடல்களில் தமிழை ஏன் சேர்க்கக்கூடாது?"

லண்டனின் 'த கார்டியன்' பத்திரிகைக்கு அளித்த பதிலில் இவ்வாறு கூறியிருக்கிறார் பிரியா ரகு.

"எல்லோரும் வந்து ஹொலிவூட் பாடல்களையே பாடுகிறார்கள். அது மகிழ்ச்சி தான்.ஆனால் நான் எங்கிருந்து வந்தேன் என்பதை மறக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக எனது பெற்றோர் நமது பண்பாட்டை என்னோடு சேர்த்து வளர்த்து விட்டிருக்கின்றனர்.



"நாங்கள் தமிழ் செல்வாக்கைப் பாடல்களில் இணைக்கத் தொடங்கியுள்ளோம். அதில் நம்மைப்பற்றி அதிகம் கண்டுகொள்ள முடிகிறது. எங்களுடைய பண்பாட்டுடன் என்னை மீள இணைக்க அது உதவுகின்றது" - என்று கார்டியனிடம் மேலும் தெரிவித்திருக்கிறார் 35 வயதான பிரியா.

சுவிஸ் சென்காளன்(St Gallen) என்ற இடத்தில் பிறந்த பிரியா, தனது சகோதரனும் இசைத் தயாரிப்பாளருமாகிய ஜாப்னா கோல்ட் (Japhna Gold) உடன் இணைந்தே சுயமுயற்சியாக இசை அல்பங்களைத் தயாரித்து வெளியிட்டு வருகிறார்.

# தலிபான்களுக்கு எதிராக பொது மக்கள் போராட்டம்!

## துப்பாக்கி சூட்டில் ஐவர் மரணம்

ஜலலாபாத், ஒக. 20

தலிபான்களுக்கு எதிராக ஜலலாபாத் நகரத்தில் மக்கள் போராட்டம் நடத்தினர். இதில் நடந்த துப்பாக்கி சூட்டில் ஐவர் உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறியமையை தொடர்ந்து தலிபான்கள் முழு நாட்டையும் தம் வசமாக்கினர்.

இந்த நிலையில், அங்கு அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் அவர்கள் முன்னாள் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய் ஆகியோருடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம், ஜலலாபாத் நகரில் கூடிய மக்கள் தலிபான்களின் கொடியை அகற்றினர். அத்துடன் அவர்களுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பியவாறு ஊர்வலமாக சென்றனர்.

இதன்போது தலிபான்கள் நடத்திய துப்பாக்கிசூட்டில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். இதன்போது, தலிபான்கள் பத்திரிகையாளர்களை தாக்கினர் என்றும் கூறப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான் செய்தி ஊடகம் ஒன்று ஒளிபரப்பிய காணொலியில் மக்கள் தேசியக் கொடியுடன் ஊர்வலம் செல்வதும், துப்பாக்கி சூட்டை அடுத்து கலைந்து ஓடுவதும் காண்பிக்கப்பட்டது. (ஐ)





# சின்சினாட்டி ரென்னிஸ்: ஆஷ்லே பார்டி இலகு வெற்றி!

சின்சினாட்டி, ஒக. 20

முன்னிலை வீராங்கனைகளான ஆஷ்லே பார்டி, நயோமி ஒஸாகா, பெட்ரா கிவிட்டோவா ஆகியோர் சின்சினாட்டி தொடரின் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

சின்சினாட்டி ரென்னிஸ் என்றழைக்கப்படும் மேற்கத்தைய தெற்கத்தைய தொடர் அமெரிக்காவில் நடக்கிறது.

இதில், முதல்நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி இங்கிலாந்தின் ஹீதர் வட்ஸனை நேற்று முன்தினம் இரவு எதிர்கொண்டார்.

இதில், 6 - 4, 7 - 6 (7-3) என்ற செற்கணக்கில் இலகுவாக வென்ற ஆஷ்லே பார்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோன்று ஜப்பானின் நயோமி ஒஸாகா அமெரிக்காவின் கோகோ கௌவுபை எதிர்த்தார். இதில் ஒஸாகா 4 - 6, 6 - 3, 6 - 4, என்ற செற்களில் போராடி வென்று மூன்றாவது செற்றுக்கு தகுதி பெற்றார்.

இதேபோன்று, செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவை ரஷ்யாவின் வெரோனிகா குடெர்மெத்தோவா எதிர்த்தார். இதில், கிவிட்டோவா 6 -2, 6- 4 என்ற செற்களில் இலகுவாக வென்றார். (ஐ)

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்: இங்கிலாந்து அணியில் மலன்!



லண்டன், ஒக. 20

இந்தியாவுடனான 3ஆவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியில் டேவிட் மலன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் ஆட்டம் ஹெடிங்லேவில் எதிர்வரும் 25ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கான 15 பேர் கொண்ட அணியை இங்கிலாந்து பயிற்சியாளர் சில்வர்வூட் வெளியிட்டார். இதில் டேவிட் மலன் பெயர் இடம்பெற்றுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் முதன் முறையாக அவர் இங்கிலாந்து அணியில் இடம்பிடித்துள்ளார். கடைசியாக 2018இல் எட்ஜ் பொஸ்டனில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடினார். ஸாக் கிராவ்லி மற்றும் ரொம் சிப்லி அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அணி விவரம்: ஜோ ரூட் (அணித் தலைவர்), மொயீன் அலி, ஜேம்ஸ் அண்டர்சன், ஜொனாதன் பெயர்ஸ்ரோ, ரோரி பேர்ண்ஸ், ஜோஸ் பட்லர், சாம் கரன், ஹசீப் ஹமீத், டான் லோரன்ஸ், சகிப் மஹ்மூத், டேவிட் மலன், கிரெய்க் ஓவர்டன், அலி போப், ரொபின்சன், மார்க் வூட். (ஐ)

# ஐ.பி.எல். தொடரில் விளையாட ஷப்மன் கில் தயாராகிறார்!

பெங்களூர், ஒக. 20

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடக்கவுள்ள ஐ.பி.எல். இரண்டாவது பாதி போட்டியில் ஷப்மன் கில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இளம் வீரரான ஷப்மன் கில் கடந்த இரு வாரங்களாக பெங்களூரிலுள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் பயிற்சி பெற்று வருகிறார். இதனால், அவர் ஐ.பி.எல். தொடருக்கு தயாராகிவிடுவார் என்று கூறப்படுகின்றது.



இந்த நிலையில் ஐ.பி.எல். தொடரில் அவர் பங்கேற்பார் என்று அவரின் அணியான கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியின் தலைமை நிர்வாக அதிகாரியான வெங்கி மைசூர் தெரிவித்தார்.

காயம் காரணமாக இங்கிலாந்தில் இருந்து திரும்பிய ஷப்மன் கில் குணமடையும் வரை வீட்டில் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் உடல்தகுதியை நிரூபிக்கும் பொருட்டு பெங்களூர் கிரிக்கெட் அக்கடமியில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பின்தள்ளப்பட்டார் கோலி



டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது. இதில் 3 இந்திய துடுப்பாட்ட வீரர்கள் முதல் 10 இல் இடம் பெற்றுள்ளனர். கிரிக்கெட் போட்டிகள் அல்லது கிரிக்கெட் தொடர் நடந்து முடிந்த பிறகு, ஐ.சி.சி தரவரிசைப் பட்டியல் வெளியீடு வழக்கம். அந்த வகையில் தற்போது இந்தியா, இங்கிலாந்து இடையே இரண்டாவது டெஸ்ட் போட்டி முடிந்த பிறகு டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில், முதல் 10 இடங்களில் 3 இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். நியூசிலாந்து அணி கப்டன் கேன் வில்லியம்சன் 901 புள்ளிகளுடன் முதலிடத்தைத் தக்கவைத்துள்ளார். இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் 180 ஓட்டங்கள் விளாசிய ஜோ ரூட் 893 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலிய வீரர்கள் ஸ்மித், மார்னஷ் லபுஷேன் உறுப்பினர்கள் மூன்று மற்றும் நான்காவது இடத்தில் உள்ளனர். அடுத்து 5,6,7 ஆகிய இடங்களில் இந்திய அணி கப்டன் விராட் கோலி, ரோஹித் ஷர்மா, ரிஷப் பந்த் வீரரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. பாகிஸ்தான் அணி கப்டன் பாபர் அசாம் தற்போது 8 ஆவது இடத்தை பிடித்துள்ளார். அடுத்து, ஆஸ்திரேலிய அணியின் டேவிட் வோர்னர் 9 ஆவது இடத்தையும், தென்னாபிரிக்க அணியின் குவின்டன் டி கொக் 10 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் நீண்ட காலம், முதலிடத்தில் இருந்த கோலி 2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஓட்டங்களை குவிக்கத் தவறி, தரவரிசையில் பின்னடைவை சந்திக்கத் தொடங்கினார். தற்போது 5 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். இனிவரும் போட்டிகளிலும் சொதப்பும் பட்சத்தில், தரவரிசையில் அவர் மேலும் பின்னடைவை சந்திக்க நேரிடும் எனக் கூறப்படுகிறது.


# விலகுகிறார் டொமினிக் திம்

நடப்பு சம்பியனும் உலக தரவரிசையில் 6ஆவது இடத்தில் இருப்பவருமான ஆஸ்திரியாவின் டொமினிக் திம் அமெரிக்க ஓப்பன் ரென்னிசில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பின் ரென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்த போட்டியில் இருந்து நடப்பு சம்பியனும் உலக தரவரிசையில் 6 ஆவது இடத்தில் இருப்பவருமான ஆஸ்திரியாவின் டொமினிக் திம் விலகுவதாக அறிவித்தார்.

அத்துடன் இந்த சீசனின் எஞ்சிய போட்டிகளிலும் விளையாடப் போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.



இது குறித்து 27 வயதான டொமினிக் திம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், ‘அமெரிக்க ஓப்பன் மற்றும் இந்த ஆண்டுக்கான எஞ்சிய சீசனையும் நான் தவறவிடுகிறேன். அமெரிக்க ஓப்பன் பட்டத்தை தக்க வைக்க முடியாமல் போனது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த ஜூன் மாதம் எனது மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் இன்னும் குணமடையவில்லை.

வைத்தியர்களின் அறிவுறுத்தலின் படி போதிய மருத்துவ சிகிச்சை எடுத்து மீண்டும் பயிற்சியை தொடங்குகையில் வலி ஏற்பட்டதால் வைத்தியர்களை சந்தித்து ஆலோசனை பெற்றேன். காயம் குணமடைய கூடுதல் காலம் ஓய்வு எடுக்கவேண்டியது அவசியம் என்று வைத்தியர்கள் அறிவுறுத்தி இருப்பதால் அமெரிக்க ஓப்பன் போட்டியில் இருந்து விலகும் கடினமான முடிவை எடுத்தேன்’ என்று தெரிவித்துள்ளார்.

# அரசை நம்பிப் பயனில்லை!

## எல்லே குணவங்ச தேரர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 20

**"அரசை நம்பி இனிப் பயனில்லை. விமர்சனங்களைக் கண்டுகொள்ளாமல் அரசு தன்னிச்சையாகச் செயற்படுகின்றது."**

**- இவ்வாறு எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்கள் மாத்திரம் அல்ல அரசியல்வாதிகளும் பொறுப்புடனும், விட்டுக்கொடுப்புடனும் செயற்பட வேண்டும். அரசு இன்று பலவீனமடைந்துள்ளது. ஆலோசனை வழங்கி இனிப் பயன் இல்லை.

கொரோனா வைரஸ் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. அரசின் செயற்பாடு தொடர்பில் பல்வேறு தரப்பினர் விமர்சிக்கின்றார்கள். தவறுகளைத் திருத்திக்கொண்டு சிறந்த முறையில் பயணிக்க வேண்டும் என ஆட்சியாளர்களுக்குப் பல முறை ஆலோசனை வழங்கியுள்ளோம். அவ்வாறான ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

அவர்கள் தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் செயற்படுகிறார்கள். ஆகவே, இனி ஆலோசனை வழங்குவது பயனற்றது. கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நாட்டு மக்கள் பொறுப்புடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட வேண்டும் என அரசியல்வாதிகள் குறிப்பிடுகின்றார்கள்.

நாட்டு மக்கள் பலவற்றை தியாகம் செய்து விட்டார்கள். அரசியல் வாதிகளும் தியாகம் செய்யவேண்டும். தற்போதைய நெருக்கடியான நிலையில் அரசியல்வாதிகள் கொழும்பில் இருந்து அரச வரப்பிரசாதங்களை அனுபவித்துக்கொண்டு தேவையற்ற விடயங்கள் தொடர்பில் கருத்துரைக்கின்றார்கள்.

அரசியல்வாதிகள் அனைவரும் தம்மைத் தெரிவு செய்த மக்கள் உள்ள பிரதேசங்களுக்குச் சென்று அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் உதவி செய்ய வேண்டும்.

அதுவே சிறந்தது. அரசை நம்பி இனிப் பயனில்லை. விமர்சனங்களைக் கண்டுகொள்ளாமல் அரசு தன்னிச்சையாகச் செயற்படுகின்றது.

ஆகவே, சுனாமி, யுத்தம் ஆகிய காலங்களில் நாட்டு மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டார்கள். தற்போதைய நிலைமையை ஓர் அனர்த்த நிலையாகக் கருதி வசதி படைத்தவர்கள், இல்லாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" - என்றார். (இ)



# புதிய களனி பாலம் விரைவில் மக்கள் பாவனைக்குத் திறப்பு

கொழும்பு, ஓக. 20

இலங்கையின் முதலாவது அதிதொழில்நுட்ப கம்பிகளின் மீது நிர்மாணிக்கப்படும் புதிய களனி பால நிர்மாணப் பணிகளில் 98.5 வீத பணிகள் நிறைவடைந்துள்ளன என்று நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அமைச்சில் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று நடைபெற்ற களனி பால மீளாய்வுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

புதிய களனி பாலத்தின் மேலதிக பணிகளில் பாதுகாப்பு கமராக்கள் நிறுவுதல், இரும்புப் பாலத்துக்கு நிறம் தீட்டுதல், நுழைவாயிலில் வடிகால் அமைப்பை நிறைவு செய்தல், பாலத்துக்கு மின்விளக்குகள் பொருத்துதல், பாதுகாப்புக்காக இரும்பு வேலிகள் அமைத்தல் மற்றும் நிலத்தைச் செப்பனிட்டு அழகுபடுத்தல் ஆகியவை அடங்கும்.

அவற்றை உரிய தரத்துக்கு அமைவாகத் துரிதமாக நிறைவு செய்யுமாறு நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யு.ஆர் பிரேமசிறிக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

புதிய களனி பாலத்தின் முடிவில் இருந்து ஒருகொடவத்தை சந்தி வரை வீதியின் இருபுறமும் மரங்களை நாட்டுவதற்கு அமைச்சின் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கினார்.

இதற்குத் தண்ணீர் வழங்க நிலத்தடி நீர் குழாய் அமைப்பை உருவாக்குமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (இ)

# சிறுவர்கள் மத்தியில் தொற்று அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 20

சிறுவர்கள் மத்தியில் கொரோனாத் தொற்றுப் பரவல் மேலும் அதிகரித்துள்ளது என லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜே.விஜேசூரியா தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று காரணமாக நாளாந்தம் சுமார் 25 சிறுவர்கள் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

"பெற்றோர் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டாலும் கூட, தமது குழந்தைகளின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் கடைப்பிடிக்க வேண்டும்" - என்றார்.

# முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் கொரோனாத் தொற்றால் மரணம்

அம்பாறை, ஓக. 20

மூத்த முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் முபீதா உஸ்மான் (வயது 74) கொரோ னாத் தொற்றால் காலமானார்.

திடீரென நோய் வாய்ப்பட்ட அவர், சாய்ந்தமருது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

அன்டிஜன் பரிசோதனையின்போது அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக் கின்றது எனக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் சாய்ந்தமருதை வசிப்பிடமாகவும் கொண்ட முபீதா உஸ்மான், 55 வருடங்களுக்கு மேலாக கலை, இலக்கிய, ஊடகத்துறை மற்றும் சமூகப் பணிகளில் மிகவும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்துள்ளார்.

இலங்கையில் மூத்த முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள அவர், தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியிருப்பதுடன், அரச தகவல் திணைக் களத்தில் பிரசார உத்தியோகத் தராகவும் பத்திரிகை தொடர்பு உத்தியோகத்தராகவும் பல வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

கலை, இலக்கிய மற்றும் ஊடகத்துறை பணிகளுக்காக 2008 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் அமைச்சின் கலா பூஷணம் விருதையும், ஊடகத் துறை சேவைக்காக 2013 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஊடக வித்தகர் எனும் முதலமைச்சர் விருதையும் அவர் பெற்றுள்ளார்.

அத்துடன், சமூக சேவைகளை மையப்படுத்தி, 2012 ஆம் ஆண்டு சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவின் சிறந்த முதல் பெண்ணாகவும், அம்பாறை மாவட்ட ரீதியில் இரண்டாம் நிலையிலும் முபீதா உஸ்மான் தெரிவு செய்யப்பட்டு, மாவட்ட செயலாளரால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள் ளார்.



மேலும், கலை, இலக்கிய, ஊடகத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக கடந்த 2020 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் கலைஞர் சுவதம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, ஐ.ரி.என். மற்றும் எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனங்களால் ஆளுமைப் பெண் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தனது குடும்ப சுமைக்கு மத்தியிலும் சமூகத்தில் குடும்பப் பெண்கள் எதிர்நோக்கும் பொருளாதார மற்றும் இதரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் பெண் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளிலும் கூடிய கவனம் செலுத்தி, அவர்களை முன்னிலைக்கு கொண்டு வருவதில் முபீதா உஸ்மான் அயராது உழைத்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கிளிநொச்சியில் இளைஞர் குழு இரவு வீடு புகுந்து வெறியாட்டம்!

கிளிநொச்சி, ஓக. 20

கிளிநொச்சி - மலையாள புரத்தில் நேற்றுமுன்தினம் இரவு வீடு ஒன்றினுள் புகுந்த இளைஞர் குழு நடத்திய தாக்கு தலில் பல இலட்சம் பெறுமதியான வீட்டு உடமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த வீட்டு நுழைவாயில் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற ஐந்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வீட் டின் கதவை உடைத்து உள் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, இரு மோட்டார் சைக்கிள்கள், தள பாடங்கள், வீட்டின் ஜன்னல்கள் உள்ளிட்ட சொத்துக்கள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

அத்தோடு குறித்த கும்பல் வீட்டுக்குள் நுழைவதை அவ தானித்த வீட்டின் உரிமையாளர் பின் வழியால் தப்பிச் சென்ற நிலையில் குறித்த கும்பல் அவ ரது மகன் மீது தந்தையைக் கேட்டு தாக்குதல் நடத்தியுள்ளது.



இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்**

# மொஹமட் முபாரக்கின் மனைவி உள்ளிட்ட நால்வருக்கும் செப். 1 வரை மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 20

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் கொழும்பு - கிங்ஸ்பெரி ஹோட்டலில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்திய மொஹமட் முபாரக்கின் மனைவி உள்ளிட்ட 4 பேரும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கின் விசாரணைகள் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றன.

இதன்போது, அவர்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

அத்துடன், அவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளுக்கு குறித்த உத்தரவைத் தெரியப்படுத்துமாறும் நீதிவான் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சந்தேகநபர்களின் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இரண்டு மடிக்கணினிகளையும் பரிசோதனைகளுக்காக அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ)

## பேரிடர் மேலாண்மை...

போம்" என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் அவசரக் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது:

"பிரதமர் அவர்களே, தயவு செய்து உங்கள் அமைதியை களையுங்கள். 2005 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சியில் "பேரிடர் மேலாண்மை சட்டம்" பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆளும், எதிர்க்கட்சிகள் இணைந்த "பேரிடர் மேலாண்மை குழு" ஒன்றை ஏற்படுத்தக் கூடிய பொறிமுறை அந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது நாங்கள் அல்ல, நீங்கள் கொண்டு வந்த சட்டம். அந்த சட்டத்தின் மூலம், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், 15 அரச அமைச்சர்களுடன் 5 எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்த குழுவாக இயங்கலாம். இந்த ஆளும், எதிர்க் கட்சிகள் இணைந்த இந்த "தேசிய பேரிடர் மேலாண்மை குழு" வின் மூலம், மக்கள் செத்து மடியும் இந்த தேசிய பேரிடரை சந்திப்போம்

நான் இந்த சந்தர்ப்பத்திலே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். பிரதமர் அவர்களே, தயவு செய்து விழித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இன்று இதிலிருந்து முழுவதுமாக விலகி நிற்கின்றீர்கள். எழுந்து வாருங்கள். உங்கள் அரசாங்கத்தில், 2005ம் ஆண்டு "பேரிடர் மேலாண்மை சட்டம்" பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இந்த சட்டத்தை இன்று முன்னிலைப் படுத்துங்கள்.

ஆளும், எதிர்க்கட்சிகள் இணைந்த "பேரிடர் மேலாண்மை குழு"வை ஏற்படுத்தும் பொறிமுறை அந்த சட்டத்தில் உள்ளது. அந்த சட்டத்தின் மூலம், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், 15 அரச அமைச்சர்களுடன் 5 எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்த குழுவாக இயங்கலாம். அந்தக் குழு, "பேரிடர் மேலாண்மை குழு" என அழைக்கப்படும். இது ஆளும், எதிர்க் கட்சிகள் இணைந்த ஒரு தேசியக் குழு.

எதிர்க்கட்சி என்ற வகையில், நமது பிரதான ஒருங்கிணைப்பாளர் லக்ஷ்மன் கிரியல்ல எதிர்க் கட்சிகளின் சார்பாக ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை முன்மொழிந்துள்ளார். நானும் அதில் உள்ளேன். அந்தக் குழு இதுவரை கூட்டப்படவில்லை. இதிலிருந்து இந்த அரசு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள தயாராக இல்லை என்பது முழு நாட்டுக்கும் தெரிகிறது.

புதிதாக எந்த ஒரு சட்டத்தையும் கொண்டு வர வேண்டியதில்லை. தற்பொழுது இருக்கின்ற சட்டத்தை, நீங்கள் கொண்டு வந்த சட்டத்தின் மூலமாவது ஆளும் எதிர்க் கட்சிகள் அடங்கிய தேசியக் குழு ஒன்றை அமைத்து, இந்த அழிவுக்கு, இந்த நெருக்கடிக்கு முகம் கொடுங்கள்.

தற்போது இந்த நாட்டில் நிகழ்வது மிகப் பெரிய குற்றச் செயல். ஏனெனில் பொறிமுறை ஒன்று இருந்தும், உபயோகப்படுத்தவதில்லை. சரியான நேரத்தில் தடுப்பூசிகள் கொண்டுவரப்படவில்லை. நாடு முடக்கப் படவில்லை. நாடு முழுவதிலும் உள்ள வர்த்தகர்கள் சுயவிருப்பின் பேரில் கடைகளை மூடும் போது, அதையும் எதிர்கட்சிகளின் சதி என அமைச்சர்கள் குறை கூறுகிறார்கள்.

நேற்று இந்நாட்டில் 171 மரணங்கள் பதிவாகின. அதுபோல கடந்த 7 நாட்களில் இறப்பு வீதம் 60 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. அத்துடன் மூன்று வகையான டெல்டா திரிபுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

தற்பொழுது அரசாங்கம் தடுப்பூசிகளை கொண்டு வந்து மக்களுக்கு செலுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இது சிறந்தது. எனினும், இது கடந்த ஜனவரி மாதம் தொடங்கப்பட்டிருக்கவேண்டும். ஆறு மாதங்கள் கடந்து விட்டன.

அர்ப்பணிப்புடன் செயல்படும் எமது மருத்துவர்கள், பொது சுகாதார அதிகாரிகள், தாதிமார், சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்ட சுகாதார பிரிவினருக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம். அதுபோல் எமது இராணுவத்தினர் 24 மணி நேரமும் சேவை செய்கின்றனர். ஒருவர் மூன்று பேரின் பணிகளை மேற்கொள்வது எனக்குத் தெரிகிறது. இங்கே கொழும்பில் நான் அவர்களை பார்க்கிறேன். அர்ப்பணிப்புடன் பணிபுரிகிறார்கள். வேலை செய்யக் கூடியவர்கள் அடிமட்டத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்கு தேவையான தடுப்பூசிகளை, கடந்த ஜனவரி மாதமே பெற்றுக்கொடுத்திருந்தால், இன்று முழு நாட்டு மக்களுக்கும் தடுப்பூசிகளை அவர்கள் வழங்கி முடித்திருப்பார்கள்.

இன்று மரணங்களுக்கு முகம் கொடுப்பவர்களைப் பாருங்கள். 60 வயதுக்கு மேற்பட்டோரே அதிகமாக மரணமடைகின்றனர். இந்த அனைத்து மரணங்களுக்கும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். பொறுப்புடன் இந்த குற்றச்சாட்டை அரசாங்கத்திற்கு எதிராக நான் முன்வைக்கிறேன். எனவேதான் இதனை குற்றச் செயல் என நான் கூறுகிறேன். இது நியாயமற்ற செயல் என நான் கூற மாட்டேன். இதனை ஒரு கிரிமினல் குற்றச் செயல் என்றே நான் கூறுவேன்.

எனவே இனியாவது, இந்நிலையை கட்டுப்படுத்த தேசிய மட்டத்திலான வேலைத்திட்டத்தை ஏற்படுத்துங்கள். ஆனால் நீங்கள் செய்வதாக இல்லை. செயற்படும் வீரரின் அரசாங்கம் என ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தின் இயலாமை இன்று வெட்ட வெளிச்சமாகி உள்ளது. தம்மால் மட்டுமே முடியும் என அரசாங்கம் கூறுகிறது.

- இவ்வாறு மனோ கணேசன் தெரிவித்தார்.

## சுகாதார...

கொரோனா நோயைக் கட்டுப்படுத்தும் சிவில் செயலணி (Civil Task Force Suppression of COVID-19) ஊடக மாநாட்டில் நேற்று பேசிய அவர், வைத்திய சாலைகளின் முழுமையான அமைப்பும் ஒரு மோசமான நிலையில் உள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அவசரகால விபத்துக்கள் உள்பட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தினசரி கொரோனா வைரஸ் நோயாளிகளுக்கு கூடுதலாக வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

தினசரி அதிகரித்து வரும் கோவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கையுடன் சுகாதார அமைப்பு பெரும் ஆபத்தில் உள்ளது. சுகாதார ஊழியர்கள் அதிகளவில் வைரஸால் பாதிக்கப்படுகின்றனர்.

நிலைமை மோசமடைந்து வருகின்றது. தாமதமின்றி உடனடி தீர்வுகளைத் தேடுமாறு சுகாதார அதிகாரிகளிடம் வேண்டுகின்றோம்.

மேலும், சவ அறைகள் அல்லது வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதல்ல, தற்போதைய கொரோனா வைரஸ் நிலமையை நிர்வகிப்பது மற்றும் கட்டுப்படுத்துவதுதான் தீர்வு-என்றார்.

கோவிட் -19 நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சிவில் செயலணியின் ஊடக மாநாட்டில் இணைந்த சுகாதார ஊழியர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த ரவி குமுதேஷ், சுகாதார வல்லுநர்கள் குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முடக்கத்தை நடைமுறைப்படுத்துமாறு அரசை வலியுறுத்தியதற்கு பின்னால் எந்த அரசியல் உள்நோக்கமும் இல்லை என்று கூறினார்.

"கொரோனா வைரஸ் தொற்றினால் இறப்போரின் எண்ணிக்கை விகிதத்தில் இலங்கை முதல் இடத்தில் இருப்பதற்கு ஒரு காரணம், கோவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கையை துல்லியமாகச் சேர்க்கத் தவறியதாகும். உண்மையான எண்ணிக்கையை விட ஐந்து மடங்கு அதிகம் தொற்றாளர்களின் எண்ணிக்கை உள்ளது.

முடக்கத்தை விதிக்க மறுப்பதன் மூலம் எட்டு மில்லியன் தினசரி ஊதியம் பெறுபவர்களைப் பாதுகாப்பதாக அரசு கூறுவது நகைச்சுவையானது, அத்தகைய நபர்கள் ஏற்கனவே ஆபத்தில் உள்ளனர்" என்றும் குமுதேஷ் கூறினார். (அ)

## காலதாமதம்...

சம்பந்தன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனுக்கும் தற்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் அமெரிக்கத் தூதுவர் இல்லத்தில் அண்மையில் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடனான பேச்சுகளை முன்னெடுக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றது.

அரச தரப்பின் முழுமையான இணைக்கப்பாட்டில் இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றவுள்ளன என்று கூறப்படுகின்ற நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

"புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளைத் தாமதப்படுத்தக்கூடாது. 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு இரண்டு மாதத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், 38 ஆண்டுகளாக எமது நிலைப்பாடுகள் குறித்து பேசிக்கொண்டுள்ளோம். இவற்றில் எத்தனையோ இணக்கப்பாடுகள் உள்ளன. ஆகவே, இதனைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களோ கால தாமதமோ இருக்கக்கூடாது" என்று அந்தக் கடிதத்தில் சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிக்கு சம்பந்தன் அனுப்பியுள்ள கடிதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு வருமாறு: -

"2021 ஜூன் 16 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் தாங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சந்திப்பதாக 2021.06.07 ஆம் திகதிய கடிதம் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது.

அந்தச் சந்திப்பு ஒத்திவைகக்கப்பட்டதாகவும் அச்சந்திப்புக்கு விரைவில் பிறிதொரு திகதி வழங்கப்படும் எனவும் எனக்கு 15 ஆம் திகதி மாலை தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது.

இது, அடுத்த நாள் காலையில் மேலுமொரு தொலைபேசி அழைப்பின் மூலமாக உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர் சொல்லப்பட்ட சந்திப்பை விரைவாக நடத்துவதற்கான திகதி மீள நிர்ணயிக்கப்படும் என்று அறிவிக்கும் இரண்டு கடிதங்கள் எனக்குக் கிடைக்கப்பெற்றன.

அதற்கு மேல் எனக்கு எவ்வித தொடர்பாடல்களும் கிடைக்கவில்லை. தாங்கள் விரும்புகின்றபோது தங்களை நாங்கள் சந்திப்போம் என்பதை தங்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

எமது நாடு சுதந்திரத்திலிருந்து பின்வரும் மூன்று அரசியலமைப்புக்களைக் கொண்டிருந்ததென்பதை நான் இங்கு குறிப்பிடுவேனாக: -

1). ஐக்கிய இராச்சியத்தின் அரசால் அவர்களுடைய சொந்த அரசமைப்பு வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சுதந்திரத்திற்கு முன்னர், தயாரிக்கப்பட்ட அரசமைப்பு.

இது, தற்போது பெருமளவு மாற்றமடைந்துள்ளது. ஸ்கொட்லாந்து மற்றும் வட அயர்லாந்து ஆகியவற்றுக்கு விரிவான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் தமது சுயாதீனமான தனித்துவங்களைக் கொண்ட ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் பகுதிகளாகும். இப் பிரதேசங்கள் இரண்டும் தற்போது தமது சொந்த சுயாதீனமான சட்டவாக்க சபைகளையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலமைச்சர்களையும் அமைச்சரவைகளையும் கொண்டுள்ளன.

அவை, கிரமமான ஜனநாயக நடைமுறைகளில் வழங்கப்பட்ட தத்தமது மக்களின் ஜனநாயக தீர்ப்புகளுக்கேற்ப ஐக்கிய இராச்சியம் என்ற வரையறைக்குள் ஆளப்படுகின்றன. இதனையே தமக்கென சொந்த சுயேட்சையான தனித்துவத்தைக் கொண்ட தமிழ் மக்களும் ஓர் ஐக்கிய பிரிபடாத இலங்கைக்குள் தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களில் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக தமது ஜனநாயக தீர்ப்புகளின் மூலம் கோரி வருகின்றனர்.

2). பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறக்கூடியதாக இருந்த ஒரு பெரும்பான்மைக் கட்சியினால் கருத்தொருமைப்பாட்டை நாடாமலே இரண்டு வருடங்களுக்குள் நிறைவேற்றப்பட்ட 1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசமைப்பு. தமிழ் மக்கள் 1972ஆம் ஆண்டின் அரசமைப்பு தயாரிப்புக்குப் பங்களிப்புச் செய்யவில்லை.

3). பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறக்கூடியதாக இருந்த ஒரு பெரும்பான்மைக் கட்சியினால் கருத்தொருமைப்பாட்டை நாடாமலே ஒரு மாதத்துக்கு குறைவான காலத்தில் நிறைவேற்றப்பட்ட 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்பு. தமிழ் மக்கள் 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு தயாரிப்புக்கு பங்களிப்புச் செய்யவில்லை.

1994ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வெரு தேசிய தேர்தலிலும் இறைமை கொண்ட மக்களால் 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளபோதிலும், 1978ஆம் ஆண்டிலிருந்து நாம் அந்த அரசமைப்பின் கீழேயே ஆளப்பட்டு வருகிறோம். இவ்வாறு, மக்களது விருப்பத்தையோ சம்மதத்தையோ பெற்றிராத ஓர் அரசமைப்பின் கீழ் நாம் ஆளப்படுகின்றோம். 1972 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்புகளை தமிழ் மக்கள் 1956 லிருந்து தமது வாழ்விடப் பகுதிகளில் நிராகரித்துள்ளனர் அவர்களும் தமது விருப்பமோ சம்மதமோ இன்றியே ஆளப்படுகின்றர்.

மேல் குறிப்பிடப்பட்டவை இலங்கை இணங்கி ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச சமவாயங்களினதும் ஆவணங்களினதும் மீறல்களாக அமைகின்றன.

அரசமைப்பைத் தயாரிக்கும் நடைமுறை இனியும் தாமதிக்கப்படலாகாது. 1972 ஆம் ஆண்டு அரசமைப்பும் 1978ஆம் ஆண்டு அரசமைப்பு முறையே 2 வருடங்களுக்கும் ஒரு மாதத்துக்கும் குறைவான காலத்தையே எடுத்தன. தற்போதைய நடைமுறை கடந்த முப்பதிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது.

இந்த நடைமுறை இனியும் தாமதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு நான் தங்களை விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன்" - என்றுள்ளது. (இ)

## 3,806 பேருக்கு...

வக் கண்காணிப்பில் உள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

நாட்டில் 2020 ஜனவரி தொடக்கம் நேற்று வரை 3 இலட்சத்து 73 ஆயிரத்து 165 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 3 இலட்சத்து 18 ஆயிரத்து 714 பேர் குணமடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் வரை 6 ஆயிரத்து 604 பேர் உயிரிழந்துள்ளனர்.

## தொற்றினால்...

வாகும்.

இதன்மூலம் நாட்டில் கொரோனா நோயினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 790ஆக உயர்வடைந்துள்ளது. நாட்டில் ஓகஸ்ட் மாதத்தின் முதல் 18 நாள்களில் 2 ஆயிரத்து 282 பேர் கொரோனா நோயினால் உயிரிழந்துள்ளனர்.

## இன்று முதல்...

படுத்துவதன் ஊடாக இந்த நிவாரணப் பொதியை வீடுகளுக்கே பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியாக அனைத்து சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக இந்த நிவாரணப் பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமூக தொற்றாகி...

மாக அறிவிக்கப்பட்டுவரும் நிலையில் உண்மையில் தற்போது நாட்டில் 200 க்கும் அதிகமான கொரோனா மரணங்கள் பதிவாகிவரும் சந்தர்ப்பங்களே அதிகம் உள்ளன அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பெருமளவு கொரோனா தொற்றாளர்கள் தனிமைப்படுத்தப்படாமல் தற்போது சமூகத்தில் நடமாடி வருவதாகவும் அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாடு
Eelanadu



## 11 முதிரை மரக்குற்றிகளுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக. 20

கிளிநொச்சி மாவட்டம், அக்கராயன்குளம் பொலிஸாரால் நேற்று அதிகாலை 11 முதிரை மரக்குற்றிகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் கப் ரக வாகனத்தில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட முதிரை மரக்குற்றிகள் கடத்தப்படவுள்ளன என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இரகசியத் தகவலையடுத்து அக்கராயன்குளம் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின்போது 11 மரக்குற்றிகளுடனும் கப் ரக வாகனத்துடனும் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## இலங்கையில் 209 மருத்துவர்கள் கொரோனா தொற்றால் பாதிப்பு

கொழும்பு, ஓக. 20

நாடளாவிய ரீதியில் 209 மருத்துவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளான மருத்துவர்களில் 30 - 40 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஒரு மருத்துவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களில் கொழும்பு தேசிய மருத்துவமனையைச் சேர்ந்த 27 மருத்துவர்களும், ஹோமாகம மருத்துவமனையைச் சேர்ந்த 17 மருத்துவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இதனிடையே, 3 மருத்துவர்கள் இதுவரை கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 1000 தாதியர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் அகில இலங்கை தாதியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமின்றி, 37 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (இ)

### சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கான

# ரணிலின் யோசனைக்கு ஜனாதிபதி பச்சைக்கொடி



கொழும்பு, ஓக. 20

**கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கோரிக்கை குறித்து, ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார்.**

**ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதியை இந்த வாரம் நேரில் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளையும், அழைத்துக் கலந்துரையாட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், பிரதமர், சபாநாயகர் உள்ளிட்ட சகல கட்சிகளின் தலைவர்களுடன் குறித்த கலந்துரையாடலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார்.

இதன்மூலம் பெறப்படும் யோசனை திட்டங்களைச் செயற்படுத்துவதன் ஊடாக கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என நாம் நம்புகின்றோம்" - என்றார். (இ)

# அரசுடன் இணைந்து செயற்பட எதிரணியினர் தயார் நிலையில்

### ஹரின் பெர்னாண்டோ எம்.பி. அறிவிப்பு

கொழும்பு, ஓக. 20

"அரசியல் பிரச்னைகளைத் தவிர்த்து, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு அரசுடன் இணைந்து பணியாற்ற எதிர்க்கட்சி தயாராக இருக்கின்றது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உலக நாடுகளைப் போன்று இலங்கையும் முகங்கொடுத்துள்ள கொரோனா வைரஸ்க்கு எதிரான அரசின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுதான் எதிர்க்கட்சியாக நாங்கள் இந்த நேரத்தில் செய்ய வேண்டிய பங்களிப்பாகும்.

எதிர்க்கட்சித் தலைவரும் இது தொடர்பில் பல விடயங்களைப் பேசி வருகின்றார். பாராளுமன்றத்தில் அரசின் பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி வருகின்றார். எனவே, இவ்வாறான நெருக்கடியான நிலையில் நாங்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதியைச் சந்தித்து இது தொடர்பில் பல விடயங்களைக் கலந்துரையாடியுள்ளார். எனவே, நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும், இந்தக் கொரோனாவைக் கட்டுப்படுத்த, அதிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்க பங்களிப்புச் செய்ய வேண்டும்.

எமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். மருத்துவமனைகளில் உள்ள குறைபாடுகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

உண்மையில் இந்த வைரஸ் எவ்வளவு காலம் இலங்கையில் இருக்கும் என எம்மால் ஒன்றும் கூறமுடியாது. எனவே, கட்சி பேதமின்றி இந்த வைரஸைக் கட்டுப்படுத்த அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" - என்றார். (இ)

# சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வணிக நிறுவனங்களை திறக்க அனுமதி

கொழும்பு, ஓக. 20

சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வணிக நிறுவனங்களைத் திறப்பதற்கு அரசு மீண்டும் அனுமதியளித்துள்ளது.

சுகாதார அமைச்சால் நேற்று முன்தினம் மாலை வெளியிடப்பட்ட புதிய சுகாதார வழிகாட்டலில், சகல வணிக நிறுவனங்களையும் மூடுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த சுகாதார வழிகாட்டல் மீள்திருத்தம் செய்யப்பட்டமைக்கு அமைவாக வணிக நிறுவனங்களைத் திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இடவசதிகளுக்கு அமைவாக ஒரு தடவைக்கு நூற்றுக்கு 25 சதவீதமானோரை மட்டும் வணிக நிறுவனங்களுக்குள் அனுமதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கொரோனா வைரஸ் பரவலிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான சகல சுகாதார விதிமுறைகளையும் பேணுவது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ)

# நீதிமன்ற செயற்பாடுகளில் இருந்து கல்கிஸை சட்டத்தரணிகள் விலகல்

கல்கிஸை, ஓக. 20

நீதிமன்றச் செயற்பாடுகளில் இருந்து விலகிக்கொள்வதற்கு கல்கிஸை சட்டத்தரணிகள் சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை அவசர விடயங்கள் தவிர்ந்த, ஏனைய நீதிமன்றச் செயற்பாடுகளில் இருந்து விலகிக்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

கொரோனா பரவல் அபாயம் காரணமாகவே அவர்கள் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த காலகட்டத்தில் உள்ள வழக்குகளை ஒத்திவைக்குமாறு மாவட்ட, நீதிவான் மற்றும் சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்ற நீதிவான்களிடம் சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

சட்டத்தரணிகள் அறை மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றையும் மூடிவிடுமாறு அவர்கள் அறிவித்துள்ளனர். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்




6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- சைக்கோ, பீசா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- பொருளாதாரம்



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்